Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 21 திங்கட்கிழமை (05-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:98

# பேச்சுக்கான வாய்ப்பு ஓரிரு நாளில் தெரியும்

## நேற்று கொழும்பு வந்த சொல்ஹெய்ம் இன்று ஜனாதிபதியுடன் ஆலோசனை

கொழும்பு,மார்ச்5

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வே நாட்டின் மத்தியஸ்தராகச் செயற்பட்டுவரும் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுக் கொழும்பு வந்துசேர்ந்தார். அவர் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து ஆலோசனை நடத்தவிருக்கின்றார்.

அரசும் - புலிகளும் விரைவில் நேரடிப் பேச்சை நடத்துவதற்கு வாய்ப்பு உண்டா என்ற கேள்விக்கு சொல்ஹெய்மின் தற்போதைய கொழும்பு விஜயத்தின்போது - அடுத்த ஓரிரு தினங்களில் - திட்டவட்டமான பதில் கிடைக்கும் என சம்பந்தப்பட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்த சொல்ஹெய்ம் தமது முன் முயற்சிகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக கொழும்பில் உள்ள தமது நாட்டுத் தூதரக அதிகாரிகளுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் இன்று பேச்சுக்களை நடத்திவிட்டு இன்று லண்டன் செல்லும் சொல்ஹெய்ம் அங்கு விடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக் குழு இந்தியத் தூதரை சந்தித்தது

யாழ்ப்பாணம்,மார்ச்5

திடீர் விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கூட்டணிப் பிரமுகர்கள் எடுத்துக்கூறினர்.

கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ்.சிவமகாராசா, யாழ்.மாநகர முதல்வர் ந.ரவிராஜ் ஆகியோர் தூதுவரை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தடைகளும் நெருக்கடிகளும்தான் போராட்டத்தை வளர்க்கின்றன

### சு.ப.தமிழ்ச்செல்வன் கூறுகின்றார்

வவுனியா,மார்ச்5

"தடைகளும் நெருக்கடிகளும்தான் எமது போராட்டத்தை வளர்க்கின்றன. இதுதான எமது வரலாறு."



- இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

தெருவெளி நாடகக் கலைஞர்களின் போர்ப்பயிற்சி நிறைவுநாளை யொட்டி அண்மையில் வன்னியில் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அரசினால் எமது தேசத்தின் மீது சுமத்தப்பட்ட போரின் விளைவாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் எமது மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வையும் ஆறுதலையும் விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும் உணர்வுபூர்வமாக எடுத்தியம்பி மக்களின் மனங்களில் விடுதலை உணர்வை விதைப்பதில் எமது தெருவெளி நாடகங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட் மூலம் நிவாரணம்; அத்தோடு

# ஏப்ரல் மாதம் சம்பள உயர்வு! ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு,மார்ச்5

☆ நாட்டில் வாழ்க்கைச் செலவு உயர்வால் கஷ்டப்படும் மக்களின் அன்றாடப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய நிவாரணங்களை வரவு - செலவுத் திட்டம் மூலம் அரசு அறிவிக்கவிருக்கிறது.

☆ அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு ஏப்ரல் மாத நடுப்பகுதி முதல் சம்பள உயர்வு வழங்கவிருக்கிறோம்.

- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தத் தகவல்களை நேற்று வெளியிட்டார்.

கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 13 ஆவது தேசிய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே இவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலத்தில் யுத்தத்துக்காக பெரும் தொகையான பணம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது. இருப்பினும் எதிர்வரும் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு நிவாரணங்கள் பல வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வரவு - செலவுத் திட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பணி மீண்டும்

### இன்று முதல் ஆரம்பமாவதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்5

யாழ்.குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைகள் மீண்டும் இன்றுமுதல் ஆரம்பமாவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகளை நடத்துவதற்கான பரீட்சகர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார் என்றும் -

இதற்கான விண்ணப்பங்களை இன்றுமுதல் சமர்ப்பித்து பரீட்சைகளில் தோற்ற முடியும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சகர் பத்துத்தினங்களே இங்கு தங்கவிருப்பதால் காலதாமதம் இன்றி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## கெப்பிற்றிக்கொலாவையில் சூட்டுக்கு 3 விவசாயிகள் பலி!

மட்டக்களப்பு,மார்ச்5

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிற்றிக்கொலாவப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் வயல் வேலைக்குச் சென்ற 3 பேர் உயிரிழந்தனர்; ஒருவர் படுகாயமடைந்தார்.

இராணுவச் சீருடை அணிந்தவர்களே தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்து, தற்போது ஹொரவப்பொத்தானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள விவசாயி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினரும் பொலீஸாரும் இணைந்து பெரும் தேடுதல் ஒன்றை அங்கு ஆரம்பித்துள்ளனர் என்றும் -

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும்-

விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

(உ-3-7)

## தடைக்கு எதிராக மேன்முறையீடு செய்ய புலிகள் தயாராகின்றனர்?

கொழும்பு,மார்ச்5

தமது இயக்கத்தை பிரிட்டனில் தடைசெய்வதற்கு அந்த நாட்டு அரசாங்கம் எடுத்திருக்கும் முயற்சிக்கு எதிராக, மேன்முறையீடு செய்வது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஆராய்ந்து வருவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஏனைய 20 இயக்கங்களுடன் சேர்த்து விடுதலைப் புலிகள் இயக்கத்தினது பெயரையும் குறிப்பிட்டு, பிரிட்டனில் தடைசெய்யப்படவிருக்கும் அமைப்புக்களின் பட்டியலை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பதும் -

அடுத்த இரண்டு வார காலத்துக்குள் இந்தப் பட்டியல் தொடர்பான விவகாரம் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் விவாதித்து நிறைவேற்றப்படும்போது இத்தடை நடைமுறைக்கு வரும் என்பதும் - தெரிந்தவையே.

இத்தடைக்கு எதிராக, அத்தடையை நீக்குமாறு கோரி -

முதலில், பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பான புதிய சட்டத்தின் நான்காம் பிரிவின் கீழ், பிரிட்டனின் உள்துறை அமைச்சரிடம் விடுதலைப் புலிகள் மேன்முறையீடு செய்யலாம்.

அது பயனளிக்காவிட்டால் அடுத்து,

(14ஆம் பக்கம் பார்க்க)

### மீளக் குடியமர அனுமதிக்கும்படி கோரி

## தொடர் போராட்டத்துக்கு வலி.வடக்கு மக்கள் முஸ்தீபு

வலி.வடக்கு,மார்ச்5

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் உடனடியாக மீளக்குடியமர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியைக் கோருவது என்றும் -

ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால் ஜனநாயக ரீதியில் - அகிம்சை வழியில் - தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் -

வலி.வடக்கில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நேற்றுக் காலை தெல்லிப்பழையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

இது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ள குழு ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பி.பி.ஸி. அலுவலகம் முன் பெரும் குண்டுத் தாக்குதல்

லண்டன்,மார்ச்5

லண்டன் நகரிலுள்ள பி.பி.ஸி. தொலைக்காட்சி நிலையத்தின் மீது நேற்று அதிகாலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் எவருக்கும் உடற்காயமோ, பாதிப்போ ஏற்படவில்லை.

சுமார் 10 கிலோகிராம் நிறையுள்ள சக்திவாய்ந்த - வெடிப்பொருள்கள் இந்தக் குண்டில் பொருத்தப்பட்டிருந்தன என்று பிரிட்டிஷ் பொலீஸ் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலருக்கு மோசமான காயங்களை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப உலகிற்கு
போட்டியாக நீங்களும் வலம்வர

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

- ☐ DESKTOP PUBLISHING USING PAGEMAKER & COREl DROW
- ☐ ACCOUNTING APPLICATION USING MS EXCEL & MS ACCESS
- ☐ DBMS USING MS ACCESS & VISUAL BASIC
- ☐ OBJECT ORIENTED PROGRAMMING USING JAVA
- ☐ JAVA APPLET & HTML
- ☐ COMPUTER HANDLING (WORD, EXCEL, MULTIMEDIA, WINDOWS)

BATCH -I

ஆரம்பம்-10-03-2001, 10.00 மணி

மேலதிக விபரங்களிற்கு
Director

**STP COMPUTER WORLD (PVT) LIMITED**

54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P: 2674
E.Mail :stpedu@hotmail.com

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்

**சரவணமுத்து சத்தியமூர்த்தி** அவர்கள்

04.03.2001 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்,
யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,
திருநெல்வேலி.

(84954)

## நன்றி நவில்கின்றோம்

வேலணை பிரதேச சபையினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் பொறுப்பேற்ற பின்னர், அவர்களின் முயற்சியினால் எமக்கு 01.04.1999ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு நியமனம் வழங்கப்பட்டு, பின்னர் எமக்கு 01.01.2001ஆம் திகதியிலிருந்து நிரந்தர நியமனம் கிடைத்துள்ளதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



எம்மிடம் இருந்து எந்தவிதமான பிரதி உபகாரத்தினையும் கருதாது சமூகப்பண்பு கொண்டு மனித நேயத்துடன் எமது நல்வாழ்வுக்கு வழி சமைத்துத் தந்தமைக்காக வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி, வடக்கு – கிழக்கு தமிழ் அலுவல்கள் மற்றும் இந்துசமய கலாசார அமைச்சரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**வி.கே. குகேந்திரன்**
அவர்களுக்கும்

அவர் வழியில் நின்று எம்மை அன்புடன் வழிநடத்திச் செல்லும் வேலணை பிரதேச சபைத் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவுப்பகுதி தெற்குப் பிரதேச அரசியல் அமைப்பாளரும் ஆகிய

**உயர்திரு.ந.கருணாகரகுருமூர்த்தி**
(மோகன் தோழர்)



அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவர்களது மக்கள் சேவை தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி
தற்பொழுது நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்கள்.

*வேலணைப் பிரதேச சபை.*

(C/15553)

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

சங்கானை - மல்லாகம் வீதிச் சந்தியில் கடந்த மாதம் 28ஆம் திகதி வாகன விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ்.ஆஸ்பத்திரி அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தவர் 5 நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார்.

சங்கானை, நிற்சாமம் பகுதியைச் சேர்ந்த முதலி பரமு (வயது - 65) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

## ஓய்வூதிய வவுச்சர்கள் விநியோகம்

கோப்பாய்,மார்ச்5

இம்மாதத்திற்கு உரிய ஓய்வூதிய வவுச்சர்கள் இன்று முதல் விநியோகிக்கப்படும் என்று கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## வேதாகம வாரம்

குருநகர்,மார்ச்5

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையுள்ள ஒரு வாரகாலம் வேதாகம வாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(உ-51)


புதிய புலமைப்பரிசில் வினாத்தாள்

**வளர்ச்சி-01**

வெளிவந்துவிட்டது!
பதிவு செய்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
தேவையானவர்கள் உடன் பெறவும்.

**SHAMROCK**
A/L 2001
கணக்கீடு
- கம்பனி
செவ்., வியா. 3 - 4
Mr.தவா
(B.Com. (Hons) (Acc.spl.)
* Spoken English
* English Literature (10+11)
* ஈச்சமோட்டை வீதியில் Gr.4 முதல O/L வரை ஆரம்பமாகியுள்ளது.
(C/15555)

**ராஜா**
யாழ்ப்பாணம்
**ஜட்டாலிக்**
(தமிழ் – ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15473)

**லக்ஷ்மி** இணுவில்
கடைசி வாரமாக
அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக்கொடு என்னைத் தருவேன்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
10.03.2001 முதல்
கண்ணன் வருவான்
(84922)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜயகாந்த், தேவயானி, வாசு, கபாலி நடிக்க
**வல்லரசு**
(ரீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(84858)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு.இ.ரவீந்திரன் ஜே.பி.**
(தொழிற்றுறைத் திணைக்களம்)
உதவி முகாமையாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.



12.02.2001 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி திரு.ஆர்.ரி.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

திரு.இராமலிங்கம் (ஜே.பி) அவர்களின் சிரேஷ்ட புத்திரனான இவர் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் ஆசிரிய சங்கத்தின் தலைவரும் ஒரு சிறந்த சமூக சேவையாளருமாவார்.

இவரது சேவை தொடர்ந்தும் சிறப்புற வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அரியாலையூர் வாழ் மக்கள்,
தொழிற்றுறை நிலையம்,
கந்தர்மடம், நல்லூர் வடக்கு.

(84946)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா கனகராசா (கார்த்திகேசு)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, கூத்தஞ்சிமாவை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் தெல்லிப்பழை கிராம சபை உறுப்பினரும், புகையிரத உத்தியோகத்தரும், கீரிமலை தீர்த்தக்கரைப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவும் ஆகிய பொன்னையா கனகராசா (கார்த்திகேசு) நேற்று (04.03.2001) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் திருமதி நல்லம்மா (அம்பிகா) அவர்களின் அன்புக் கணவரும், Dr.முத்துக்குமாரு, அருந்தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனக மகேந்திரா(அதிபர்), கனக இராசேந்திரா (லங்கா சிமெந்து தொழிற்சாலை ஊழியர்), புவனேந்திரா (தெல்லிப்பழை கிராம சபை உத்தியோகத்தர்), பாலேந்திரா, யோகேந்திரா (ஜேர்மன்), விஜயேந்திரா (கொழும்பு), சிவனேந்திரா (சிங்கப்பூர்), ஞானேந்திரா (இந்தியா), ரவீந்திரா (ஜேர்மன்), தவனேந்திரா (சிங்கப்பூர்) கஜேந்திரா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இந்தியாவில் (நங்கை நல்லூர் சென்னையில்) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனக இராசேந்திரா
(மகன்)

*உடுவில் தெற்கு,*
*பாலாவோடை,*
*இணுவில்.*

(84949)

## அருமைத்துரை பரமுருகானந்தன் (பரா)

உடுவில் தெற்கு,பாலாவோடை,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட அருமைத்துரை பரமுருகானந்தன் சுவிற்ஸர்லாந்தில 20.02.2001அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் அருமைத்துரை - மங்களேஸ்வரியின் புத்திரனும், கீர்த்திசீலன் (வவா - சுவிஸ்), அருள்மதி (ராஜி - உடுவில்தெற்கு, பாலாவோடை), தர்மசீலன்(சிறி-நீர்கொழும்பு), பஞ்சசீலன் (சிவா-லண்டன்), சிவமதி (விஜி), கனிமதி (சுகி-உடுவில் தெற்கு,பாலாவோடை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகநாதன் (நாதன் - காரைநகர் களபூமி வலுப்போடை), நிவேதினி (நிதி-சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற இரத்தினம் சின்னம்மா, இராசதுரை நல்லம்மா (நீர்கொழும்பு) ஆகியோரின் பேரனும், பரராஜசிங்கம் சந்திரதேவி (கொழும்பு), பாலசுப்பிரமணியம் சந்திரமலர் (உடுவில்), கனகசபை சரோஜினிதேவி (உடுவில்), காந்தன் பாலறஞ்சினி (நோர்வே), மகேஸ்வரன் பத்மஜினி (உடுவில்) ஆகியோரின் பெறாமகனும், பாலசுப்பிரமணியம் விமலதேவி (உடுவில்), பாலச்சந்திரன் மீனாலோஜினி (நீர்கொழும்பு), பாலு குடும்பம் (இந்தியா), விஜயகுமார், பிறேமமாலினி (இத்தாலி), சிங்கநாயகம் (நீர்கொழும்பு), காலஞ்சென்ற சிங்கநாயகம் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2001) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு உடுவில் தெற்கு, பாலாவோடை, மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:-
இ.அருமைத்துரை குடும்பம்,
ஆ.சண்முகநாதன்
(மைத்துனர் - நாதன்)
குடும்பம்

ஆ.சண்முகநாதன் (நாதன்)
*உடுவில் தெற்கு,*
*பாலாவோடை,*
*மானிப்பாய்.*

(84884)

## பொன்னையா நல்லையா

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த பொன்னையா நல்லையா நேற்று (04.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினகாந்தியின் அன்புக் கணவரும், துரைராஜசிங்கம், ஜயக்கோன்,புவனேந்திரன், மகாசிங்கம், பாக்கியராஜா, தவமலர், சாந்தநாயகி, கமலநாயகி, தெய்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவதேவி, சுசிலாதேவி, ராணி, யசோதராதேவி, கோகிலசுந்தரி, ஈஸ்வரபாதம், வெள்ளைச்சாமி, நெல்லிநாதன், ரஞ்சநாதன், ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.03.2001) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.வெள்ளைச்சாமி
(மருமகன்)

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(84953)

# உதயன்

## இரட்டை முகம்

★ நாட்டை நெருக்கடிக்குள் ஆழ்த்தியுள்ள இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே எனது உண்மையான குறிக்கோள்.

★ நாம் உத்தேசித்துள்ள அரசமைப்பு வடிவத்தில் அவசியம் ஏற்பட்டால் திருத்தங்களைச் செய்வதற்குத் தயாராக உள்ளோம். எனினும் புதிய அரசமைப்பு வடிவத்துக்கு பெரும்பான்மையான மக்களின் கருத்தை அறிய வேண்டும். ஆனால் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆக்கபூர்வமான ஆதரவு கிடைத்துவிடுமாயின் அதனை நிறைவேற்றுவது சாத்தியமாகும் என்றே நான் நினைக்கிறேன்.

★ இலங்கையில் போர் ஆரம்பமான பின்னர், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முந்திய அரசாங்கம்எதற்கும் கிடைக்காத மிகவும் நல்லதொரு சந்தர்ப்பம் எனக்கு வாய்த்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்தியாவிலிருந்து வெளிவரும் 'புரொண்ட்லைன்' சஞ்சிகைக்கு வழங்கிய நீண்ட செவ்வியில் மேற்கண்ட தகவல்கள் — அம்சங்கள் — அடங்கி உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான காலம் கனிந்து வருவதாகக் கோடிட்டுக் காட்டியுள்ள அதேவேளை, இது விடயத்தில் முன் அனுபவத்தின் பேரில் தாம் மிகவும் கவனமாக, எச்சரிக்கையாக இருப்பதாகவும் ஜனாதிபதி விவரித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் இரண்டு மாத காலத்தில் ஆரம்பமாகும் என்று அவர் பெப்ரவரிக் கடைசி வாரத்தில் தகவல் வெளியிட்டதும் இந்தியாவில் இருந்த வேளையிலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனையையும் நம்பிக்கை தரும் குரலில், குறிக்கோளில் மிகுந்த பற்றுறுதி கொண்டவர் என்ற தொனியில் தெரிவித்த ஜனாதிபதி—

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்வதன் மூலம் — அதனைத் தொடர்ந்து—அவர்கள் மீது அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் கூறுகிறார்.

இந்தத் தகவல்—கருத்து—மேலே கூறப்பட்ட அம்சங்களால் உண்டான நம்பிக்கையை தவிடு பொடியாக்குகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்று கூறினாலும் அதனால் பெரிதும் பாதிக்கப் படுபவர்கள், அவலங்களை அனுபவிப்போர், தமிழ்மக்களே.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்கள். அத்தோடு தன்னிச்சையான போர் நிறுத்தத்தை மூன்று மாத காலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இத்தனைக்கும் பிறகும் அவர்களுக்கு எதிராகப் போரைத் தொடர்வதாகக் கூறுவது அவர்கள் மீது அரசுக்கு அறவே நம்பிக்கை இல்லை என்பதனையே காட்டுகிறது.

இந்தப் போரானது பேரழிவுகளைத் தருவதாக அதே செவ்வியில் கூறியுள்ள ஜனாதிபதி, அதனைத் தொடர்வதில் அக்கறை காட்டுவது ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது.

—இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முந்திய அரசாங்கம் எதற்கும் கிடைக்காத அரிய சந்தர்ப்பம் தமக்கு வாய்த்துள்ளதாகக் கூறும் அதே வேளை — போரைத்தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவுள்ளதாக கூறுவதும் முரண்பட்டகருத்துநிலைகளே.

இந்த முரண்பட்ட நிலைப்பாடுகள் இரட்டை நாக்குடன் பேசுவனவாக மட்டுமன்றி இரட்டை முகங்களைக் காட்டுவதாகவும் உள்ளன.

# அரசும் இராணுவமும் செய்ய முயல்வதையே எம்.பிக்கள் என்று கூறுவோரும் செய்கின்றனர்

## கவலை தெரிவிக்கின்றார் மாவை சேனாதிராஜா

வலி. வடக்கு மார்ச் 5

''அரசு சமாதானப் பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டே பல நாடுகளில் இருந்தும் அதி நவீன ஆயுதங்களை அன்பளிப்பாகவும், பணத்துக்கும் பெற்று வருகின்றது. அரசின் இத்தகைய நடவடிக்கையை நாம் மிகவும் அவதானமாக நோக்க வேண்டும்.

''எம் மக்களையும் சொத்து சுதந்திரங்களையும் அழித்தொழிக்கவே இந்தப் புதிய ஆயுதங்கள் பயன்படுத்தப் படவுள்ளன.

''பேச்சுக் குறித்து அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே கூட முரண்பாடுகள் காணப்படுகின்றன.

''அரசாங்கமும் இராணுவமும் எதைச் செய்ய முயற்சிக்கின்றனவோ அதனைத் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்பவர்கள் செய்வதைப் பார்க்கும்போது கவலையாகவும் வெட்கமாகவும் இருக்கின்றது''

— மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குறிப்பிட்டார்.

வலி.வடக்குப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் விவகாரம் சம்பந்தமான கலந்துரையாடல் வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள இல்லத்தில் நேற்றுக்காலை இடம் பெற்றது. அங்கு பேசிய போது மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

''எமது பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்கக்கூடாது. அதற்கு எதிரான நடவடிக்கைகளை பொதுமக்களாகிய நாம் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும்.

''ஆயிரம் வீட்டுத் திட்டம் குறித்து— அரசினால் இந்தச் செயற்பாடு குறித்து — ஏதும் அறிக்கைகள் வந்துள்ளனவா என்று கேட்டேன். அரசு இது சம்பந்தமாக எந்த வகையான அறிவுறுத்தல்களையும் எமக்கு அனுப்பி வைக்கவில்லை. இதனை நாங்களே நடைமுறைப்படுத்துகிறோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

''யாழ். அரச களஞ்சியத்தில் 49 லட்சம் ரூபா குறைகேடு இடம்பெற்றது சம்பந்தமாக தற்போது வழக்கு நடைபெற்றுவருகின்றது.

இந்தப் பொருள்களுக்கு என்ன நடந்தது? பொதுத் தேர்தல் காலத்தில் 13லொறிகளில் இந்தப் பொருள்களே இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு கள்ளவாக்குகள் போட வழி செய்யப்பட்டது.

''தற்போது வலி வடக்குப் பகுதியில் பல பாடசாலைகள் இராணுவத்தால் அழிக்கப்பட்டும், அவர்களின் பயன்பாட்டிலும் உள்ளன. இது குறித்து கல்வி அமைச்சருடன் கதைத்துள்ளோம். அவர் இராணுவத்தினரை பாடசாலைகளை விட்டு வேளியேறும்படி கோரியுள்ளார். இதனால் இராணுவத்திற்கும் கல்வி அமைச்சுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

''வீட்டுத் திட்டங்கள் கூட தமது பண ஆதாயத்துக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. வலி. வடக்குப் பகுதி மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சொந்த இடங்களில் வீடுகள் கட்டி மீளக் குடியேற உதவி வழங்கப்பட வேண்டியவர்கள்.

''சில லாபங்களுக்காக எம்மை யாரும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. எமது பகுதியில் எமக்கு மீளக் குடியமர வழி செய்யப்படவேண்டும். எமது பகுதியில் நாம் வீடுகளைக் கட்டிக் குடியமர அனுமதிக்கவேண்டும் — என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா அங்கு கூறியதாவது:-

''நாம் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு எதிரானவர்கள் அல்லர். கடந்த காலங்களில் காங்கேசன்துறைத் தொகுதியில் கட்டப்பட்ட பல வீட்டுத் திட்டங்களின் வீடுகளும் நலிந்த வீ ற்ற மக்களுக்கே வழங்கப்பட்டன.

''தற்போதும் கூடக் கட்டப்படுவதாகக் கூறப்பட்டுள்ள ஆயிரம் வீட்டையும் வீடுகள், காணிகள் இல்லாதவர்களுக்கு வலி. வடக்கில் மீளக் குடியேற்றி அங்கேயே கட்டிக் கொடுக்க வேண்டும் என்றே கூறுகின்றோம்'' — என்றார்.

யாழ். மாநகர சபை முதல்வர் ந ரவிராஜ் அங்கு கூறியதாவது:-

''வலி வடக்குப் பகுதி மக்களே தமது பிரச்சினைகளுக்கு ஊர்வலம் நடத்தவேண்டுமே யொழிய வேலணை, ஊர்காவற்றுறை, வலி. மேற்குப் பகுதியில் உள்ளவர்கள் அல்லர்.

''அண்மையில் இடம்பெற்ற ஊர்வலத்தில் கலந்து கொண்ட வலி. மேற்கு இளைஞர்களை நான் சந்தித்தேன். ''வேலைகள் தரப்படவுள்ளன. நிற்கும் பஸ்ஸில் ஏறிச் சென்று அமைச்சரைச் சந்தியுங்கள்!'' என்று கூறியே எம்மை அழைத்து வந்து ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் செய்தார்கள் என்று அவர்கள் என்னிடம் கூறினர்.

''எங்களை நிரந்தரமாக லயங்களில் வாழ வழி செய்வதற்கே இந்த ஆயிரம் வீட்டுத் திட்டம் வழி செய்யவுள்ளது. அரசு மிகவும் சாதுரியமாக எம்மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் மூலமே இச்சதி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது''— என்றார்.

வலி. வடக்குப் பகுதி புனர்வாழ்வுக் கழகத் தலைவர் க. பரமநாதன் தனது உரையில் கூறியதாவது:-

ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு ஒரு லட்சத்தி முப்பதாயிரம் ரூபா செலவிடவுள்ளதாகக் கூறுகின்றனர் இதேபோன்றே ஏனைய சேதம் அடைந்த வீட்டு உரிமையாளர்களுக்கும் வழங்கப் படவேண்டும்.

''தற்போது 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதை நிறுத்தி அதனை ஒரு லட்சத்தி முப்பதாயிரம் ரூபாவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்''— என்றார். (உ-86)

## கல்விக்கல்லூரி அனுமதிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 5

தேசிய கல்வியியற் கல்லூரிக்கான அனுமதிக்காக மேன்முறையீடு செய்தவர்களில் நால்வர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 8ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இயங்கும் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

எஸ். பத்மினி (சித்தன்கேணி) — நூலக விஞ்ஞானம், பி. டொறின் நெஸ்டா (இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்) — ஆரம்பக் கல்வி, ரி. பிரதீபன் (சுன்னாகம்) — விஞ்ஞானம். என். கலாசக்தி (காரைநகர்) — சங்கீதம் ஆகியோரே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய எஸ். ஸ்ரீகார்த்திகாஜினி(அல்வாய்) ஆர். கோகிலகிமாலினி (பொலிகண்டி) ஆகியோருக்கு யழ். தேசியகல்வியியற் கல்லூரிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மண் அள்ளத் தடை

நெல்லியடி, மார்ச் 5

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் மண் அள்ளுவது இன்று திங்கட் கிழமை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி மண் அள்ளுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுத பிள்ளை தெரிவித்துள்ளார். (உ—109)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்க அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது (உ-5)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் மரதாந்தப் பரிசளிப்பும் கணிப்பீட்டறிக்கை வழங்கலும் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அக்கடமியின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்) கலந்து கொள்வார். (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 5

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் நல்லூர் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;

### 15 வயதுப் பிரிவு

★ காலை 8 மணி முதல் — கனகரெட்ணம் ம.ம.வி. எதிர் கொக்குவில் இந்து.

★ செங்குந்த இந்து. எதிர் யாழ். இந்து மகளிர்.

### 17 வயதுப் பிரிவு

★ யாழ். இந்து மகளிர் எதிர் கொக்குவில் இந்து.

★ செங்குந்தா இந்து எதிர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.

★ கனகரெட்ணம் ம.ம.வி. எதிர் பெரியபுலம் ம.வி.

★ கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் எதிர் முத்துத்தம்பி ம.-வி.

### 15 வயதுப் பிரிவு

★ பிற்பகல் 2 மணிக்கு செங்குந்தா இந்து எதிர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.

★ கனகரெட்ணம் ம.ம.வி. எதிர் முத்துத்தம்பி ம வி.

### 17 வயதுப் பிரிவு

★ யாழ். இந்து மகளிர் எதிர் செங்குந்தா இந்து.

★ கரகரெட்ணம் ம.ம.வி. எதிர் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்.

★ பெரியபுலம் ம.வி. எதிர் முத்துத்தம்பி ம.வி.

★ கொக்குவில் இந்து எதிர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம். (உ-86)

★ ★ ★

வலி வடக்கு, மார்ச் 5

யாழ்ப்பாணம் கல்வி வலய கோப்பாய் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு'

### 19 வயதுப் பிரிவு

★ நீர்வேலி அத்தியார் இந்து-எதிர் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி.

### 17 வயதுப் பிரிவு

★ இடைக்காடு ம. வி. எதிர் அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்.

மற்றும் 15 வயது, 17 வயதுப் பிரிவினர்களிடையேயான கால் அறுதி ஆட்டங்களும் அந்த இடம்பெறவுள்ளன. (உ—86)

## நால்வர் கைது

யாழ்ப்பாணம், மார்ச். 5

குருநகரிலுள்ள அரச களஞ்சியத்தின் கூரைச்சிற்றுக்களை திருடியதாக சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருநகரைச் சேர்ந்த செல்வம் அன்ரனி (வயது 27), சவுரி குணசீலன் (வயது 37), தில்லையன் நவரத்தினம் (வயது 33), அன்ரனி இராசு (வயது 23) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த நான்கு சந்தேக நபர்களும் தற்பொழுது யாழ். பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-5-ரி)

### உதயவாக்கு

குழந்தைப்பருவ இதயத்தை எவன் இழக்காமல் இருக்கிறானோ அவனே உயர்ந்த மனிதன்.

### நாளை

மாசி 22

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி முற்பகல் 8-50 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம் முற்பகல் 8-02 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 10.56—12.26

ராகுகாலம்: 3.26—4.56

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி புஸ்பலோஜினி மகேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கிருஷ்ணபிள்ளை கனகம்மா**

அவர்கள் 20-01-2001 இல் அமரத்துவம் அடைந்தமையையிட்டு அன்னாரது குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொண்டு, அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்,
உரும்பிராய். (சி/15545)

## பதவி வெற்றிடம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
ஊழியர் நலன்புரிச் சங்கத்தில்
**பகுதிநேர எழுதுநர் பதவி**

மேற்படி சங்கத்தில் எழுதுநராகச் சேவையாற்றுவதற்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமைகள் தொடர்பான விவரங்களை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

டாக்டர் எஸ். கதிரவேல்பிள்ளை
தலைவர்

ஆர். திருவருட்செல்வம் R சதீஸ்
செயலாளர் பொருளாளர்

(84917)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை
## வாகனச் சாரதி வெற்றிடம்

எமது அலுவலகத்தில் வாகன சாரதிக்கான வெற்றிடம் உள்ளது. பாரிய வாகனங்களைச் செலுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களைத் தாங்களே தயாரித்து 22—03—2001 ஆம் திகதிக்கு முன்னதாக எமது காரியாலயத்துக்கு அனுப்பப்பட வேண்டும். நேர்முகப் பரீட்சை 25 — 03 — 2001 முற்பகல் 10-30 மணிக்கு எமது காரியாலயத்தில் நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்குத் தனிப்பட்ட கடிதம் அனுப்பப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் சாரதி அனுமதிப்பத்திரம், இரண்டு சான்றிதழ்கள், இறுதியாகக் கடமை புரிந்த அலுவலகத்தில் பெறப்பட்ட சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்துடன் செய்முறைப் பரீட்சையும் நடைபெறும்.

கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-15547)



## றெனி
## மூக்குக் கண்ணாடி அகம்
## RENNY OPTICIANS

இடம் பெயர்ந்துள்ள தென்மராட்சி மக்களுக்காகவும் வடமராட்சி மக்களுக்காகவும்
எமது கிளை நிலையம் ஒன்று பருத்தித்துறையில் உள்ள
கணன் போட்டோ கொப்பி
சேவிஸ் ஸ்தாபனத்திலே
ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

உங்கள் கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**
**கணன் போட்டோ கொப்பி சேவிஸ்**

பிரதான வீதி, பருத்தித்துறை.

288, நாவலர் வீதி, 540, ஆஸ்பத்திரி வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம். (84912)

## எரிபொருள் 'பவுசர்'கள் வரும்

அரியாலை, மார்ச் 5

பெருமளவு எரிபொருள்களை ஏற்றிச் செல்லக் கூடிய பெரிய 'பவுசர்' வாகனங்கள் இரண்டு விரைவில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட உள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை விநியோகப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

13 ஆயிரத்தி 200 லீற்றர் எரிபொருளை ஏற்றிச் செல்லக் கூடிய 'ஜம்போ' பவுசர் வாகனங்களே யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளன. (ஐ-17)

## சங்கக் கிளைகள் திருத்தப்படுகின்றன

அரியாலை, மார்ச் 5

கைதடிப் பகுதியில் மூன்று சங்கக் கிளைகள் தற்போது திருத்தப்பட்டு வருவதாக கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் வசதி கருதி சங்கக் கிளைகளை மீண்டும் இயக்குவதற்காக இக் கிளைகள் தற்போது திருத்தப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## ச. ச. நிலையம் தீக்கிரை

வடமராட்சி, மார்ச் 5

மேலைப்புலோலி வாணர் குடியிருப்பு சனசமூக நிலையம் இரவு வேளையில் இனந் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது

கிடுகுக் கூரையைக் கொண்ட இச் சனசமூக நிலையம் கடந்த வாரம் திடீரெனத் தீப்பற்றி எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## மாணவர் இன்றி இரு பாடசாலைகள் மூடப்பட்டன

வடமராட்சிக் கல்வி வலயத்தில் நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்த இரு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

கரவெட்டி நாவலர் மடம் நாவலர் தமிழ்க்கலவன் பாடசாலை, புலோலி கிழக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியஇரு பாடசாலைகளுமே மூடப்பட்டுள்ளன.

போதிய மாணவர்கள் இன்மையால் இப்பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூடப்பட்ட இரு பாடசாலைகளிலும் தென்மராட்சியிலிருந்துஇடம்பெயர்ந்த இரு பாடசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன. (ஐ-173)

## நல்லூர்ப் பகுதியில் வீட்டில் புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஒருமணியளவில் இனம் தெரியாத நபர்களால் வீட்டில் வைத்து தாக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் கோயில் வீதியைச் சேர்ந்த கந்தையா தர்மு (வயது - 38) என்ற குடும்பஸ்தரே அவரது வீட்டில் வைத்துத் தாக்கப்பட்டார். இவரை அதிகாலை 1.30 மணியளவில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அம்புலன்ஸ் மூலம் ஏற்றி வந்து யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

திருட வந்தவர்களே தம்மைத் தாக்கியதாக காயமடைந்தவர் கூறுகிறார். இவர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் பணிபுரிபவர். (க-6)

## கேள்வி அறிவித்தல்

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத
ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய
தேர் தரிப்பு மண்டப
**இரும்புத் தகரப்படலை அமைத்தல்**

படலைகள் உயரம் 28 அடி, அகலம் 20 அடி இரு பக்கங்கள் கொண்ட, இலகுவாகத் திறந்து பூட்டும் வகையில் அல்லது கழற்றிப் பூட்டும் வகையில் அமைத்து இணைத்து விடத் தங்கள் கேள்வித் தொகையைத் தனித்தனியாக அறியத்தரவும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விவரங்களை ஆலய பணியகத்தில் 2001-03-06 ஆம் திகதி செவ்வாய், 07 ஆம் திகதி புதன்கிழமைகளில் காலை 10 மணி முதல் 12 மணி வரை, மாலை 3 முதல் 5.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 2001-03-12
திங்கள் பகல் 12.00 மணி

விண்ணப்பப் படிவம்:- ரூபா 50

கோ சிவசுந்தரமூர்த்தி
(தலைவர்),
பரிபாலன சபை.

வீரபத்திரர் ஆலயம்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (84942)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 | 05 |
| — | — |
| 09 | 03 |
| — | — |
| 1910 | 1986 |

### அமரர் முதலியார் வை. மகேசன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல்
செய்வன திருந்தச் செய்த செம்மனச் செல்வர்
தெய்வப் பணிகள் பற்பல தேசமோங்கச் செய்தவா
வானுலகில் ஐயா நீ வாழி நீடுழி!

தங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்,
உறவினர், நண்பர்கள்.

''லிங்க வாசா''
முதலியார் மகேசன் றோட்,
நவாலி. (84888)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 12 |
| — | — |
| 12 | 03 |
| — | — |
| 1942 | 1995 |

### அமரர் குப்புசாமி முருகையா

(முன்னாள் உரிமையாளர், புன்னாலைக்கட்டுவன்சந்தி லஷ்சுமிபவான், கோண்டாவில் சந்தி, ஆரியபவான்)

திதி: 05 — 03 — 2001

துடித்தோம் பிள்ளைகள் நாம். துவண்டார் அம்மா
அடித்தார்கள் நெஞ்சமதில் அப்பா நீ எங்கே என்று
அழைத்தாலும் வரமாட்டீர், அமைதி இடம் நோக்கி
அழைத்துவிட்டான் இறைவன் - அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்.
மனைவி, பிள்ளைகள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (84786)

# ஈ.பி.டி.பியின் வளர்ச்சி - அரசின் செல்வாக்கு இவற்றுக்கு அஞ்சியே புலிகள் போர் நிறுத்தம்!

**நடிகரும் அரசியல் விமர்சகருமான 'சோ' இராமசாமியை ஆசிரியராகக் கொண்ட 'துக்ளக்' சஞ்சிகைக்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அளித்த செவ்வி இது.**

**'துக்ளக்' சஞ்சிகையின் 14-02-2001 இதழில் வெளியான அச்செவ்வி இங்கு முழுமையாகப் பிரசுரமாகின்றது.**

வெளிப்புறத்தில் பலத்த பாதுகாப்பு இருப்பதாகத் தோன்றினாலும், வந்திருப்பது யார் என்பது தெரிந்து விட்டால், பெரிய பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. சோதனை இன்றி அமைச்சரை சந்திக்க முடிந்தது. கொழும்பிலிருந்து பகல் வேளையில் யாழ்ப்பாணத்தைத் தொடர்பு கொள்ள முடியாத நிலையின் காரணத்தினால், தானும் பிரச்சினைக்குள்ளாகி இருப்பதை விளக்கியவாறு பேச்சை ஆரம்பித்தார் தேவானந்தா.

"யாழ் மாகாணத்தில் மொத்தத்திலேயே சில ஆயிரக் கணக்கான தொலைபேசிகள்தான் உள்ளன. கொழும்பிலுள்ளவர்களும் சரி, இதர உலக நாடுகளிலிருந்தும் சரி, யாழ். நகரத்தில் உள்ள பலரை, லட்சக் கணக்கானோர் தொடர்பு கொள்ள நாள் முழுவதும் முயல்கிறார்கள். இதற்குக் காரணம் - இங்கிருந்து லட்சக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளில் வசிப்பதுதான். நான் அமைச்சர் - ஆனால் என்னிடத்திலேயே மொத்தம் 3 தொலைபேசிகள்தான் உள்ளன. இது அமைச்சருக்கான தொலைபேசிகள் மட்டுமல்ல - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் சேர்த்து யாழ். நகரில் 3 தொலைபேசிகள்தான் உள்ளன. கொழும்புக்கும், யாழ் நகரிலுள்ள இந்த அலுவலகத்துக்கும் ஒரு 'ஹாட் லைன்' இருந்தது. இயற்கை சீற்றத்தின் காரணமாக (இடி விழுந்ததால்) அந்தத் தொடர்பு அறுபட்டுப் போயிற்று. விரைவில் இந்த நிலையை சீர்திருத்துவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

"பல்குழல் பீரங்கிகள் **(Multi-barrel rocket launchers)** இயங்கி, யாழ். நகரை அரசாங்கம் படை பலத்தால் மீட்டது. இப்பொழுது பல் குரல் அரசியல் இயக்கமாக நாங்கள் செயல்பட்டு, யாழ் நகரத்தை பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்" என்றார்.

*கேள்வி:-* மற்ற ஈழ கட்சிகளுக்கும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் என்ன வேறுபாடு?

*பதில்:-* "மற்ற கட்சிகளுள் பெரும்பாலானவை 'தமிழ் ஈழம்' என்று துவங்கின. சில கட்சிகள்தான் - ஈழம் என்றால் இலங்கையின் எல்லா மக்களுக்கும் சொந்தம் என்ற அடிப்படையில் ஆரம்பித்தன. இன்று ஈ.ம.ஜ.க.வைத் தவிர மற்றவை தங்களது ஆதரவை - குறிப்பாக புலிகளின் கோட்டையாக கருதப்பட்டு வந்த யாழ்.மாகாணத்தில் இழந்து விட்டன. இங்கு குறைந்த பட்சம் 8 இடங்களையாவது எதிர் பார்த்தோம். அரை கிணறை தாண்டிவிட்டோம். நான்கு இடங்கள் கிடைத்தன. தேர்தல் நேரத்திலேயே அதிபர் சந்திரிகாவை ஆதரித்தோம். புலிகள் எவ்வளவு மிரட்டியும், பிறகு மற்ற கட்சிகளை ஆதரிக்க முயன்றும் எங்களுக்கு 4 இடங்கள் கிடைத்தன. ஆனால் - இனிவரும் தேர்தலில் இந்த நிலைமாறும். ஈ.ம.ஜ.க. வட - கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல்கள் நடத்தப்படும் போது, பெரும்பான்மையை வெல்லும் என்று நம்புகிறேன்.

*கேள்வி:-* தமிழ் ஈழ விடுதலை இயக்கம் **(TELO)**, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி **(TULF)** போன்ற கட்சிகள் ஏன் புலிகளை ஆதரித்து இங்குள்ள நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கின்றன?

*பதில்:-* அக்கட்சிகளின் தலைவர்களைக் கொன்ற புலிகளை, இன்று அவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால், நாங்கள் ஆட்சியில் இருந்தாலும், அவர்கள் இவ்வாறு நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்திலும் புலிகளுக்கு ஆதரவாகக் கதைப்பதை (பேசுவதை) தடுக்கவில்லை. அவர்களை, மக்கள் தெரிந்து கொண்டுவிட்டார்கள். அவர்கள் 'அரசியல் செல்லுபடி ஆகாததை, வடகிழக்கு மாகாண மக்கள் நிரூபித்து விட்டார்கள். உதாரணத்துக்கு மட்டக்களப்பிலுள்ள தமிழ் மக்கள், அரசு பேரூந்துகளில் இலங்கை அரசின் படை வீரர்களோடு பயணம் செய்யக் கூடாது என்று 'தடை உத்தரவு' போட்டு, அது தோற்றுப் போய்விட்டது. மக்கள் திருகோணமலையிலிருந்தும், மட்டக்களப்பில் இருந்தும் - புலிகளின் தொல்லைகளை தாங்க முடியாமல் யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் வருகிறார்கள்.

அதற்குக் காரணம், இங்கு அமைதி நிலவுகிறது. முன்பு லீற்றர் 2,500 ரூபாய்க்கு விற்கப்பட்ட பெற்றோல், இன்று 75 ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆனால் இதையும் குறை கூறுபவர்கள் இருக்கிறார்கள். கொழும்பில் உள்ளதை விட 20 ரூபாய் அதிகம் என்கிறார்கள். எரிபொருள்கள், இங்கு கப்பல் வழியாக வருகின்றன. வழியில் எங்கு கண்ணிவெடி இருக்கும் என்பதை அறியாமல் - மக்கள் சக்தியை நம்பி யாழ்.நகரில் உள்ளவர்களுக்கு எல்லா அத்தியாவசியப் பொருள்களும் கிடைக்கும்படி செய்துவிட்டோம். விரைவில் இந்த நிலைமை மற்றப் பகுதிகளிலும் வரும்.

இன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சி, தமிழ் மக்களிடத்தில் எங்கள் அரசின் செல்வாக்கு வளர்வதைக் கண்டு - வேறு வழியின்றி புலிகள் போர்நிறுத்தப் பிரகடனத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். காரணம் - மக்கள் போரை விரும்பவில்லை. அதுவும் தவிர, புலிகளிடம் போரிட ஆள்களில்லை. அவர்களுக்கு சமாதானத்தில் அறவே நம்பிக்கை கிடையாது. அவர்களது பகுதிகளிலேயே மக்கள் அவர்களை வெறுக்கிறார்கள். கிளிநொச்சி பகுதியில் அவர்களது அலுவலகத்தை மக்கள் கொளுத்தி இருக்கிறார்கள்.

*கேள்வி:-* இந்தச்செய்திகளெல்லாம் ஏன் வெளி உலகத்திற்கு தெரிவதில்லை?

## 'துக்ளக்' சஞ்சிகைக்கு டக்ளஸ் பேட்டி

*பதில்:-* அதற்கு புலிகளின் வசம் உள்ள பொய்களைப் பரப்பும் பிரிவு **(Disinformation set-up)** பெரிதாக உதவுகிறது. உதாரணத்திற்கு சமீபத்தில் ஒரு பத்திரிகை நிருபர் - அவர் பி.பி.ஸி. போன்ற அமைப்புகளுக்கும் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தவர் - புலிகளுக்கு சாதகமாக செயலபட்டுக் கொண்டிருந்தவர் அவர்களாலேயே கொல்லப்பட்டார். அதற்கு முக்கிய காரணம், இலங்கை அரசு - நாங்கள் அங்கம் வகிக்கும் அரசு - அவரது நடவடிக்கைகளை கண்டு பிடித்து அவரை கைது செய்யும் தறுவாயில் இருந்தது.

அவர் மாட்டியிருந்தால் பல இரகசியங்கள் அம்பலமாகியிருக்கும். புலிகள் உடனே அவரைக் கொன்று பழியை எங்கள் மீது போட்டுவிட்டனர். இந்தப் பொய்யான செய்தி உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. ஆனால், எல்லாவித ஆதாரங்களுடன் அந்த பொய்ச் செய்தியை நாங்கள் அம்பலமாக்கியபோது, பத்திரிகைகளும் (இங்குள்ள) பத்திரிகைகளைத் தவிர இருட்டடிப்பு செய்தன. அவர்கள் இதுநாள்வரை சுமார் ஒரு லட்சம் மக்க ளையாவது கொன்றிருப்பார்கள். இந்த செய்தியை வெளியுலகம் அறிந்ததில்லை. தலைவர்களை எடுத்துக்கொண்டாலேயே பத்மநாதன் முதல் பத்மநாபா வரை - ஸ்ரீ சபாரத்தினம் முதல் அமிர்தலிங்கம் வரை - அத்துலத் முதலி முதல் பிரேமதாஸா வரை இப்படி எத்தனை தலைவர்கள்? இதற்கு எல்லாவற்றிற்கும் மேலாக, ராஜீவ் காந்தியை - அவர்களுக்கு உதவ முயன்ற முன்னாள் இந்தியப் பிரதமர் - பிறகு பிரதமராக வர வாய்ப்பிருந்த மனிதரைக் கொன்றார்கள். இன்று அதே புலிகள் - பிற இயக்கங்கள் மூலமாக இந்தியாவின் உதவியை நாடுகிறார்கள்.



அன்று அமைதிகாக்கும் படையைத் தலைகுனிய வைக்க, பிரேமதாஸாவை பயன்படுத்தியவர்கள் - பிறகு அவரையும் பகிரங்கமாகக் கொன்றார்கள். இன்று- அரசியல் காரணங்க ளுக்காக ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, சில தமிழ்க் கட்சிகளும் சரி - புலிகளுக்கு வக்காலத்து வாங்குகின்றன. இந்த அநியாயத்தை உலகின் எந்த பத்திரிகைகளும் அம்பலப்படுத்தவில்லை. அதற்கு முக்கிய காரணங்கள் - அரசியல் மற்றும் பணம்; பிறகு முன்பு ஒரு முறை பாலசிங்கம் கொகரித்தது போல் - பாட்டில் இலங்கையில் இந்த விஷயங்கள் வெளி வந்து பயனும் இல்லை. இங்கு அவர்களது சாயம் வெளுத்து விட்டது. அதை மறைக்க போர் நிறுத்த பிரகடனம்.

அமைதிக்காகக் கதைப்பது போன்ற பாசாங்கு. எங்கள் அரசு, அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் எண்ணமே இல்லாத போது, அந்த சாத்தியக்கூறை அரசு பரிசீலித்து வருவதாக வதந்திகள் கிளப்பப்பட்டு உலகெங்கும் செய்தியாகின.

*கேள்வி:-* அது சரி, புலிகளோடு பேசினால் அவர்களின் இரட்டைவேடம் அம்பலம் ஆகாதா?

*பதில்:-* பேச்சுவார்த்தை என்பது வெறும் வேடம், பாசாங்கு. நீங்கள் சொன்னபடியே, பேச்சுவார்த்தை என்று ஒன்றை ஆரம்பிப்பதாகவே வைத்துக்கொள்வோம். அடுத்த கட்டம் என்ன? போர்நிறுத்தத்தை அரசு அறிவித்தால் - ஈழத்தில் எஞ்சியுள்ள கொஞ்ச நஞ்சம் இளைஞர்களை, பெண்களை மிரட்டி, மூளைச்சலவை செய்து பலிக்கடாவாக்குவார்கள். அவர்களுக்கு ஆள்கள் கிடைத்தவுடன் போர் மறுபடியும் துவங்கும். 'இதற்கு ஒரு முடிவில்லாமல், ஒன்றும் தென்படாமல் பேசிப் பயனில்லை' என்று நோர்வே நாட்டுத் தூதர் தெளிவாகத் தெரிவித்துவிட்டார். ஆனால் அந்தச் செய்தியும் இருட்டடிப்பு செய்யப்பட்டது. மாறாக- இலங்கை அரசு, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி பரிசீலித்து வருவதாக வதந்திகள்தான் செய்திகளின் உருவில் வெளிவந்தன.

*கேள்வி:-* இங்குள்ள இடிபட்டுக் கிடக்கும் கோயில்களுக்கு என்ன செய்ய இருக்கிறீர்கள்?

*பதில்:-* இலங்கையின் சரித்திரத்திலேயே முதல் முறையாக இந்து மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களை கவனிக்க அரசாங்கம் ஓர் அமைச்சகத்தையும், அதற்காக பெரிய அளவில் பணத்தையும் ஒதுக்க ஒப்புக்கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ரகசியங்கள் கிடையாது. இங்குள்ள விடுவிக்கப்பட்ட இடங்களை நீங்களே நேரில் சென்று பார்த்துக் கொள்ளலாம். இன்னொரு விஷயம். இங்கு புலிகள் ஆதரவாளர்களையும், நாங்கள் பகிரங்கமாக, சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்து இருப்பதையும் நேரில் பார்க்கலாம். குறிப்பாக தின்னவேலியிலுள்ள (திருநெல்வேலி என்ற ஊர் இவ்வாறு அழைக்கப்படுகிறது) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களையும், ஆசிரியர்களையும் சந்தித்து பேசிப் பாருங்கள். *

## ஆதரவற்றோருக்குக் கைகொடுப்போம்

### தவக்காலச் சிந்தனை

### 6 ஆம் நாள்

நம்மைப் படைத்தவரும், பராமரித்துக்காப்பவரும் இறைவன். தமது ஒரே சொல்லால் உலகையும் அதில் உயிர் வாழ் அனைத்தையும் உருவாக்கிய இறைவன் மனிதனைப் படைக்க ஆலோசனை நடத்தி தமது சாயலாகப் படைத்தார். எனவே மனிதன் அன்பும், அறிவும் கொண்ட இறைவனின் பிரதிபலிப்பு.

மனிதன் தனித்தீவன்று. சமுதாயத்தில் கூடிவாழவே அழைக்கப்பட்டுள்ளான். பொருள்களை, உடைமைகளை வைத்திருக்கும் உரிமை எனக்குள்ளது போலவே எனது அயலானுக்கும் உண்டு. மற்றவர்களின் பொருள்களின் மேல் பேராசை கொண்டு அபகரிப்பது குற்றமாகும். சமுதாய நீதியைக் கடைப்பிடிப்பது ஒவ்வொரு இறைமக்களதும் கடமையாகும். பிறரை வஞ்சித்தல், அபாண்டம் கூறுதல், வேலை வாங்கிக் கொண்டு கூலி கொடாதிருப்பது பெருங் குற்றமாகும். எனவே "உனக்கு நீ அன்பு செய்வது போல உன் அயலானையும் அன்பு செய்" என்கின்ற ஆண்டவரின் குரலுக்கு செவிசாய்ப்போம்.

பிறருக்கு நன்மை செய்ய வாய்ப்புக்கள் இருந்தும் நன்மை செய்யத் தவறிய காலங்கள் எத்தனை? நழுவவிட்ட காலங்கள் எத்தனை எத்தனை? வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்திலும் இறைவனின் முன்னிலையில் நிற்கிறோம் என்பதை உணர்கிறோமா?

"சின்னஞ்சிறிய என்சகோதரர்களுள் ஒருவனுக்கே நீங்கள் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" எனும் இறைவனின் வார்த்தைக்கு செவிசாய்ப்போம். அகதிகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு, அநாதைகளுக்கு கைகொடுப்பதன மூலம் இறைவனை அன்பு செய்து வரப்போகும் மீட்புக்கு எம்மைத் தயார் செய்வோம்.

அ.மரியா

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய்,மார்ச்5

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் செல்வி போ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனும், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்து கொள்வார்கள்.

(ஐ-135)

## செயலமர்வு ஒத்திவைப்பு

தென்மராட்சி,மார்ச்5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த சேவைக்கால செயலமர்வு மார்ச் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. செயலமர்வு அன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மார்ச் 10 இல் பொன்விழாக் காணும்

**உயர்திரு.க.தேவராஜா**

**(வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்)**

"பொன்மனைச் செம்மல் புகழோடு வாழி"

செந்தமிழ் ஊறும் நம்தமிழ் ஊரில்
பைந்தமிழ் போற்றும் பொன்மனைச் செம்மல்
வெந்தணல் காட்சி வேகிடும் நாட்டில்
உம்பணி கண்டு வியந்து போனோம்.

(84704)

*கங்கை ஓ(F) செற், பிறின்ரேர்ஸ், யாழ்ப்பாணம்.*

திரு.V.தயாபாலன்
இயக்குநர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முன்னாள் (காலி) பிரபல வர்த்தகரும், தம்பாட்டி
கடற்றொழிலாளர் சங்க முன்னாள் தலைவரும்
ஊர்காவற்றுறை பிரதேசசபை உபதலைவரும்
சமூக சேவையாளருமான
திருவாளர்

**நாகமுத்து திருச்செல்வம் அவர்கள்**

சமாதான நீதிவானாக நியமிக்கப் பெற்றமையையிட்டு அவரை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வியாபாரிகள்,
தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

(84895)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 11 - 1919 | 29 - 03 - 2000 |

**உயர்திரு. இளையதம்பி ஞானசேகரம்**
(இளைப்பாறிய தொலைபேசி இயக்குநர்,
பலாலி விமான நிலையம்)
*திதி: 05.03.2001*

**ஆண்டு ஒன்று அகன்றது அப்பனே!
நீண்ட நினைவுகள் நிலைத்து நிற்குது!
மாண்ட உங்கள் ஆத்ம தரிசனம்
வேண்டி உம்பதம் வணங்கி நிற்கிறோம்.**

பிரிவால் கலங்கித் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி: ஞானசௌந்தரி *(கனடா),*
உற்றார், உறவினர்கள்.

*ஞான.திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர்),
'ஞானசேகரம் இல்லம்'
இணுவில் தெற்கு.*

(84820)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 03 - 1926 | 10 - 03 - 1991 |

**அமரர் R.M.தியாகராசா**
[Formerly Ministry of Health]
திதி: 05.03.2001

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்து, எங்கள் எல்லோரையும்
ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு,
இறைவனிடம் சேர்ந்த தெய்வமே!

பத்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"ராஜ் மகால்"
சித்தன்கேணி.* (84847)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்5

தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தரும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளருமாகிய செல்லையா மெற்றாஸ் மயில் எழுதிய 'மண் வாசனையில் மூன்று நாடகங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், ஆகமஜோதி சிவஸ்ரீ சதாமகாலிங்க சிவகுருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டுரையை செங்கை ஆழியான் கலாநிதி க.குணராஜா நிகழ்த்துவார். ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதன், திருமறைக் கலா மன்றப் பொதுச்செயலாளர் ஜோன்சின் ராஜ்குமார் ஆகியோர் நிகழ்த்துவர்.

(ம-7)

## 'ஒப்படை' குறித்து தொழிற் பட்டறை

யாழ்ப்பாணம்,மார்ச்5

ஜி.சீ.ஈ.(உயர்தர) மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான 'ஒப்படை' குறித்து யாழ். மாவட்ட உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கான இரண்டாவது தொழிற்பட்டறை எதிர்வரும் ஏழாம் திகதி புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக நூலகர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 6ஆம் திகதி நடத்தப்பட்ட முதலாவது தொழிற் பட்டறையில் பங்குபற்றியோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்று பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் அறிவித்துள்ளார். (ம)

## இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு உதவி

வன்னியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் மா, சீனி போன்ற உணவுப் பொருள்களுடன். பொது மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட உடுப்பு வகைகளையும் வழங்கியுள்ளது.

வவுனியா அரச அதிபர் ஊடாக விநியோகம் செய்யப்படுவதற்காக, வவுனியா கச்சேரியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட லொறியில் மேற்படி பொருள்கள் கடந்த வெள்ளியன்று காலை கொழும்பில் வைத்து ஏற்றப்பட்டு அங்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

அகில இலங்கை இந்து மாமன்றம் வன்னியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு அவ்வப்போது நிவாரணப் பொருள்களை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ம-3)


**வைத்தியம்**

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாத நோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்,
*121,2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459*
(84882)



I.B.S சுண்டிக்குளி, கோயில் வீதி.

தரம் 1 முதல் O/L வரை
புதிய அனுமதிகள்
தரம் 5க்கான
புலமைப்பரிசில் விசேட
வகுப்புகள் உட்பட.
தரமான ஆசிரியர்
உயர்வான கல்வி
(84846)


### யுத்தத்தால் கடந்த காலத்தில்

## குடாநாட்டு மீனவருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து விவரம் சேகரிப்பு

யுத்தத்தால் குடாநாட்டுக் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் அங்கவீனம், உடைமைகள் அழிவு, தொழில் இழப்புகள் தொடர்பான விவரங்களை கடற்றொழிலாளர் சங்க சமாசம் திரட்டி வருகிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா பயிற்சியை முடித்துவிட்டு வெளியேறியுள்ள அ.அருள்ஜெயரட்ணம் தலைமையில் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த விவரங்கள் திரட்டப்படும்.

கடற்றொழிலாளர்களின் சங்கங்களிற் கூடாக ஒவ்வொரு மீனவ குடும்பங்களையும் சந்தித்து மேற்படி இழப்புகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன.

திரட்டப்படும் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இனிவரும் காலங்களில் மீனவர்களுக்கு உதவ முன்வரும் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங்கண்டு நிவாரணம் வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

முதற் கட்டமாக தற்போது பருத்தித்துறை பகுதியில் வாழும் கடற்றொழிலாளர் குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன(க-6)

## பாராட்டி வாழ்த்தி நல் ஆசி கூறுகின்றோம்



யாழ்ப்பாணம், பெரிய கடை முஹைதீன் ஜும்ஆ முஸ்லிம் பள்ளிவாசல் திருத்த வேலைகளுக்காக நிதி வழங்கிய வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி மற்றும் தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சரும் தமிழ் பேசும் மக்களின் சேவையின் பணிகளில் முன்னின்று உழைப்பவருமாகிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு இடம்பெயர்ந்த யாழ்.முஸ்லிம் மக்கள் தங்களது நன்றியைத் தெரிவித்து அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது சேவை தொடர்ந்தும் இடம்பெற எல்லாம் வல்ல இறைவன் நல் அருள் புரியவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபை,
முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசல்.

*பெரியகடை,
யாழ்ப்பாணம்.*

(84854)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு.கணபதிப்பிள்ளை சண்முகநாதன்**

பண்பில் உயர்ந்தவரும், பல்லாண்டு காலமாக மக்கள் பணியும் சமயப்பணியுமே தனது உயிர் மூச்சு எனக் கருதிச் சேவையாற்றிவரும் புலோலி மத்தி கிராமசேவை உத்தியோகத்தரும், ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் முகாமையாளரும், ஆத்தியடி சனசமூகநிலைய; சைவ மன்ற முன்பள்ளி போசகரும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் உப தலைவரும், பருத்தித்துறை மத்திய மருந்தக நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும், யா/வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளரும், தமிழ், சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பாளரும், வடமராட்சியின் புகழ் பூத்த பிரபல சிங்கள ஆசிரியரும், பரம்பரை வைத்தியரும் ஆகிய

ஆத்தியடி மண் பெற்ற பெருமகனார்

*உயர்திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள்*

இதுவரை காலமும் ஆற்றிவரும் சமூகப் பணிகளைப் பாராட்டி எல்லாம் வல்ல ஆத்தியடிப் பிள்ளையாரின் கிருபையால் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

- விசுவாசமுள்ள
புலோலி மத்திவாழ் மக்கள்,
ஆத்தியடி சனசமூக நிலையம்.

*குறிப்பு:-*

**திரு.க.சண்முகநாதன் அவர்கள்**

**12-02-2001 ஆம் திகதி வரை கிராம சேவை உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்றமையையிட்டு, அவரது சேவையைப் பாராட்டும் முகமாக 06-03-2001 செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக சேவை நலன் பாராட்டு விழாவும் பிரிவு உபசார விழாவும் நடைபெறும். இவ்விழாவிற்கு அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.**

ஆத்தியடி சனசமூக நிலையத்தினர்,
பருத்தித்துறை.

(84831)

# Uduvil Girls' College

Cordially invites you to her
Founders Day Celebration
on
Tuesday the 6th of March 2001
at

# Uduvil Girls' College

## Programme

2.30 p.m. *Praise Service at J.D.C.S.J Church*
3.00 p.m. *Laying of wreaths.*
3.30 p.m. *Opening and Dedication of the Harriet Winslow Memorial Science Complex.*
4.30 p.m. *Cultural Show.*

**Chief Guests : Rev.and Mrs. Eric Gass**
**Former Secretary, U.C.B.W.M.**

**Principal,**
**Staff and Students,**
**Uduvil Girls' College.**

(C/15499)


## பழனிமலை ஞாபகார்த்தப் பேருரை

யாழ்ப்பாணம்,மார்ச்5

தவில் மேதை கைதடிப் பழனி மலை ஞாபகார்த்தப் பேருரை ஏழாலையில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையின் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் எதிர்வரும் வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமரரின் திருவுருவப் படத்தை இசை வேளாளர் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் திரை நீக்கம் செய்து வைப்பார்.

ஞாபகார்த்த உரையை 'ஈழத்து இசைவளர்ச்சியின் படிமுறைகள் பற்றி ஓர் ஆய்வு' என்னும் பொருளில் யாழ்பல கலைக கழக இசைத்துறைத் தலைவர் ந.வி.மு.நவரத்தினம் வழங்கவுள்ளார்.

வாழ்த்துரையை சிவஸ்ரீ சோமாஸ் கந்தக்குருக்கள் வழங்குவார். சிறப்புரைகளை இந்து சமயப் பேரவை செயலாளர் சி.சக்திகிரீவனும் கிராம அலுவலர் க.வாமதேவனும் நிகழ்த்தவுள்ளனர் (ஐ-5)

## குடும்பஸ்தர் கொலை முயற்சி வழக்கு:

# சந்தேக நபர்களில் ஒருவருக்கு மட்டுமே பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்5

துன்னாலை தெற்குப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை கொலை செய்ய எத்தனித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த இரு சந்தேக நபர்களில் முதலாவது சந்தேகநபருக்கு பிணை அனுமதி மறுக்கப்பட்டதுடன் 2 ஆவது சந்தேக நபரை பிணையில் செல்ல மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

துன்னாலை தெற்கில் கடந்த வருடம் யூலை மாதம் 15ஆம் திகதி ஆள்வான் சவுந்தரநாயகம் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற சந்தேகத்தில் நெல்லியடிப் பொலீஸாரால் ஆனந்தம் குணம் மற்றும் சிவபாதம் சிவஞானம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிமன்றில் தொடரப்பட்ட மேற்படிவழக்கு, கடந்த வெள்ளிக்கிழமை மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது. மேல் நீதிமன்றம் மேற்படி வழக்கின் முதலாவது சந்தேக நபரை நெல்லியடி பொலீஸாரின் அறிவுறுத்தலின் படி பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

இரண்டாவது சந்தேகநபரை 3 ஆயிரம் ரூபா உறுதிப் பிணையிலும் 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்வதற்கு அனுமதித்த மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா 2 வாரங்களுக்கு ஒரு முறை வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (க-6-5)





நாளை செல்லையா மெற்றாஸ்மயில் எழுதிய

# "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்"

(வெடியரசன்/ சங்கிலியன்/ பூதத்தம்பி வசனநாடகங்கள்)

# நூல் வெளியீட்டு விழா



**காலம்** :- மு.ப. 10 தொடக்கம் பி.ப. 1.30 வரை. 06.03.2001
**இடம்** :- யாழ்.இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.
**தலைவர்**:- வைத்திய கலாநிதி **வை.தியாகராசா** J.P
(தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)

(மு.ப) **நிகழ்ச்சிநிரல்**

10.00 மங்கள விளக்கேற்றல்
10.05 மௌன வணக்கம்
10.08 வரவேற்பு பா மதுரகவி காரை.**எம்.பி.அருளானந்தம்**
10.13 தலைமையுரை
10.20 ஆசியுரை
  ✻ பேராயர் கலாநிதி **எஸ்.ஜெபநேசன்**
  ✻ ஆகமகிரியாஜோதி **சிவஸ்ரீ.சதா.மகாலிங்கசிவக் குருக்கள்**
10.35 வாழ்த்துரை
  ✻ உயர்திரு. **க.சண்முகநாதன்,** அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.
  ✻ உயர்திரு. **து.வைத்திலிங்கம்** மேலதிக அரசாங்க அதிபர்
  ✻ பேராசிரியர் **பொ.பாலசுந்தரம்பிள்ளை** உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்
  ✻ உயர்திரு. **மு.திருநாவுக்கரசு** பதில் மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்
  ✻ உயர்திரு. **ப.விக்னேஸ்வரன்,** வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம்.
  ✻ கலாநிதி **சு.சிவலிங்கராசா** தலைவர், தமிழ்த்துறை. யாழ்.பல்கலைக்கழகம்.
11.10 வெளியீட்டுரை
  செங்கையாழியான் - கலாநிதி **க.குணராசா**
11.20 பிரதிகள் வழங்கல்
11.40 கருத்துரை
  திரு. **சி.தார்சீசியஸ்.** முன்னாள் அதிபர்
11.45 நூலிலிருந்து பாடல்
  திரு. **நா.விமலநாதன,** ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி.
11.50 ஆய்வுரை
  ✻ கவிஞர் **சோ.பத்மநாதன,** மேலதிக மாகாண கல்வித்திணைக்களம்.
  ✻ திரு. **ஜோன்சன் ராஜ்குமார்,** ஆசிரியர் (செயலாளர் நாயகம், திருமறைக்கலாமன்றம்)
12.10 நூலிலிருந்து பாடல்
  நடிககலாமணி **வ.செல்வரத்தினம** (செல்வம்)
  திருமதி **அன்னலட்சுமி தனபாலசிங்கம.** சங்கீத ஆசிரியை
  திரு. **யஸ்ரின் தைரியநாதன்.**
12.20 நாடகம்
  நூலிலிருந்து சங்கிலியன் நாடகத்தில் ஓர் அங்கம்
  நடிகர்கள் :
  காத்தவராயன் புகழ் **பொ.அருந்தவநாதன** ஆசிரியர்
  கலாபூஷணம் 'கலைமகிழ்னன்'. **வே.க.பாலசிங்கம்**
  கலையரசன் **மா.சிவரத்தினம்** (ஜீவா)
  திரு. **யஸ்ரின் தைரியநாதன்**
  திரு. **வ.தயாநிதி** ஆசிரியர்
12.50 பதிலுரை
  நூலாசிரியர் **செல்லையா மெற்றாஸ்மயில்**
1.00 நன்றியுரை
  திரு. **வ.சி.செல்வராசா** செயலாளர், (பா.க.மே.கழகம்)

பிரதிபெறுபவர்கள்
முதற்பிரதி : திரு. **சி.தார்சீசியஸ,** முன்னாள் அதிபர்
  புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம் (O.L.R)
இரண்டாம் பிரதி : திரு. **சோ.தில்லைநாதன்**
  கோட்டக்கல்வி அதிகாரி, வேலணை.
மூன்றாம் பிரதி : பேராசிரியர் **இரா.சிவச்சந்திரன்**
  தலைவர், புவியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

சிறப்புப் பிரதிகள் பெறுபவர்கள்
**சிவஸ்ரீ சதா மகாலிங்கசிவக் குருக்கள,** அரசடிப்பிள்ளையார் தேவஸ்தானம், நாயன்மார்கட்டு.
திரு. **க.இராஜதுரை,** அதிபர் மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்.
திரு. **சரா. புவனேஸ்வரன்,** இயக்குநர், சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம்.
பேராசிரியர் **கா.குகபாலன்,** புவியியல்துறை, யாழ்ப்பாணம்.
திரு. **க. கனகரத்தினம,** நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம்.
திரு. **கு. சிவபாலன்** பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம்.
திருமதி **யோ.சிவப்பிரகாசம்,** முகாமையாளர், மக்கள்வங்கி, கன்னாதிட்டி.
திரு. **க.பாலச்சந்திரன்,** முகாமையாளர், மக்கள்வங்கி யாழ்.பிரதான வீதி.
திரு. **B.P. பாஸ்கரன்,** இயக்குநர், எடிசன் அக்கடமி, யாழ்ப்பாணம்.
திரு. **வா.தவச்செல்வம்** J.P கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
திரு. **ம.பற்றிக்டிறஞ்சன்** ஆசிரியர், யா இந்துக்கல்லூரி
திரு. **க.வை.சுந்தரராஜா** முன்னாள் தொலைத்தொடர்பு பரிசோதகர் 'கமலவாசா' சித்தன்கேணி.
திரு. **பா.சிவபாலன்** - பிரதம எழுதுநர், யாழ்.வலயக் கல்வித்திணைக்களம்.
**தென்இந்தியத் திருச்சபை ஆதீனம்**
திரு. **சு.திசநாயகம்பிள்ளை** J.P தலைவர், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
டாக்டர் **ரெஜி சொலமன,** லாவண்யா கண்ணாடி அகம், 552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
திரு. **த.சத்தியதாசன.** தலைவர், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
திரு. **நா.சங்கரப்பிள்ளை,** தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
திரு. **ச. பாலசுந்தரம,** 20, சுண்டிக்குளி வீதி, யாழப்பாணம்.
நடிக கலைமணி **வ.செல்வரத்தினம்** (செல்வம்)
வைத்திய கலாநிதி **எஸ்.இராசேஸ்வரி,** ஈஸ்வரி ஹோமியோபதி மெடிக்கல் கிளினிக் - பருத்தித்துறை வீதி, நல்லூர்.
திரு. **V.J.கொன்ஸ்ரன்ரைன்** - இயக்குநர் புதிய கலாசார கவுன்சில் 28/1, சென்ஜேம்ஸ் மேற்குவீதி, யாழ்ப்பாணம்.
திரு. **ந.தவசோதிநாதன்** ஆசிரியர், வங்கியடி இணுவில் கிழக்கு.
திரு. **நடராசா இராசரட்ணம்** பேபி போட்டோ, பலாலி றோட், திருநெல்வேலி.
திரு. **குயின்ரஸ் திருஞானம்** (SLEAS ) விரிவுரையார், பலாலி ஆசிரியர் கலாசாலை.
திரு. **வ.தில்லைநடராஜா** கிராமசேவையாளர், சங்கானை. 40/1 வைமன் றோட், யாழ்ப்பாணம்.
திரு. **ஆ.சந்திரன்,** உரிமையாளர் சந்திரா கச்சான் அல்வா தொழிற்சாலை, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
திரு. **எல்.கெங்காதரன்,** உரிமையாளர், கெங்கா உலோகக் கலையகம், KKS றோட், யாழ்ப்பாணம்.
திரு. **இ.நந்தகோபால்** மில்க்வைற் தொழிற்சாலை
திரு. **ஆ.மகாதேவன்** (SLEAS ) விரிவுரையாளர், பலாலி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
**இலங்கைவேந்தன்** - ஆசிரியர், சென்ஜேம்ஸ் ம.வி. யாழ்ப்பாணம்.
திரு. **சி.யசோதரன்** - ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி.
திரு. **ச.கிருபானந்தன்** - ஆசிரியர், அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.
திரு. **க.வேலாயுதம்** - ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி.
திரு. **செ.வசந்தகுமார்** - கிராமசேவையாளர், உரும்பிராய் தெற்கு.
திரு. **ந.நேசக்குமார்** - உரிமையாளர் மாரிமுத்து கட்டடத் தொழில்நுட்பக் கூடம், 13/2, துரைராஜா வீதி, யாழ்ப்பாணம்.
திரு. **இ.சிவலிங்கம்** உரிமையாளர் ரட்ணா மோட்டர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்.
லயன் **A.ஜெயகுமாரன** உரிமையாளர், P.J. பெர்னாண்டோ கண்ணாடி அகம், யாழ்ப்பாணம்.
திரு. **எம்.வேலாயுதபிள்ளை** - ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி.
திரு. **ப. திருஞானசம்பந்தன்** - ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி.
திரு. **சி.பாலசுந்தரம்** - கிராமசேவையாளர், 159, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
திரு. **ம.செல்வம்** - உரிமையாளர், ஸ்ரீ சாயி துர்க்கா நகையகம், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
திரு. **A.பிரசாத்,** "கிருஸ்ணாஸ", 9, ஆறாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம்.

✻ நூல் ஆசிரியரின் சில நண்பர்கள், ஆதரவாளர்களின் முகவரி பெறுவது கஷ்டமாகையால் இந்த அழைப்பை ஏற்கவும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**நூலின் விலை : 200**

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்**

(84930)

### வாழ்த்துகின்றோம்

தேனினும் மிக்க சுவைமிக்க ஐஸ்கிறீம், ஐஸ்சொக், ஐஸ்பழங்களும் சோடா வகைகளும் நவீன முறையில் தயாரித்து வழங்கும் ஸ்தாபனம்
**கலாஸ் கிறீம்ஹவுஸ் அன்ட் கலா சோடாக் கம்பனி**
*166/2 நாவலர் றோட், யாழ்ப்பாணம்.*

எழில் குன்றா அழகிய தங்கப்பவுண் நகைகளை ஓடர் கொடுத்துச் செய்து பெற்றிடலாம். 22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
**தயா நகைப் பூங்கா**
213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லோட்டஸ் மிதிவண்டி ரயர் டியூப்கள், C.I.C பெயின்ட் விநியோகஸ்தர்கள், பொது வியாபாரிகள், தரகுமுகவர்கள் மற்றும் மிதிவண்டி உதிரிப்பாகங்கள், பிலிம்ரோல் ரேடியோ, வீடியோ கசட், பன்ஸி பொருள்கள் ஆகியனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
*50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

ஐஸ்கிறீம் வகைகள்
✪ சொக்லட் கிறீம்ஸ் ✪ ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
✪ புரூட்சலட் ஐஸ்கிறீம் ✪ வனிலா ஐஸ்கிறீம்
✪ சொக்லட் ஐஸ்கிறீம் ✪ ஜெலி ஐஸ்கிறீம்
✪ நட்ஸ் ஐஸ்கிறீம்
நாடவேண்டிய இடம்:
**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# பராயமடையாத அப்பாவிச் சிறுவர்களை திருட்டுக்குப் பயன்படுத்தும் சமூகச் சீரழிவு!

## அதிகரித்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றார் யாழ்.நீதிபதி

யாழ்ப்பாணம்,மார்ச்5

"பராயமடையாத - 16 வயதுக்குக் குறைந்த - சிறுவர்களை திருட்டுப் போன்ற குற்றங்களுக்குப் பயன்படுத்தும் போக்கு நமது சமூகத்தில் திடீரென மிக வேகமாக அதிகரித்துள்ளமை வேதனைக்குரியதாகும்"

இவ்வாறு அதிர்ச்சி தரும் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா.

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியில் கடந்த வெள்ளியன்று வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற சமயம் அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நமது சமூகத்தில் திடீரென திருட்டுக் குற்றங்களின் எண்ணிக்கை வீதம் அதிகரித்துள்ளது. அதுவும் திருட்டுக் குற்றங்களுக்கு பராயமடையாத - 16 வயதுக்குட்பட்ட - சிறுவர்களைப் பயன்படுத்தும் போக்கு வேகமாக அதிகரித்திருப்பது அதிர்ச்சி தரும் விடயமாகும்.

திருட்டுக் குற்றம் செய்பவர்கள் தாங்கள் சிக்காமல் தப்புவதற்காகவும், பொதுமக்களுக்குச் சந்தேகம் ஏற்படாமல் இருக்கவும் சிறுவர்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் சிறுவர்கள் இரண்டு வகையினராக இருப்பதை நான் அவதானித்துள்ளேன். ஒன்றில் மிகவும் வறிய குடும்பத்தைச சேர்ந்தவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அந்த வறுமையைத் திருடர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சிறுவர்களை தங்கள் கருவிகளாக்குகின்றார்கள். இல்லையேல், பெற்றோரால் ஒழுங்காகக் கவனிக்கப்படாத - வழிப்படுத்தப்படாத - சிறுவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அதுவும் திருடர்களுக்கு வாய்ப்பாகி விடுகின்றது.

எனவே எமது இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தி, இவ்வித சமூகச் சீரழிவுகளில் சிக்கவிடாது காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சமூகத்தின் மூத்த பிரஜைகளைச் சாருகின்றது. பாடசாலை, ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்று சகல தரப்பினரும் இச்சீரழிவு பரவாமல் தடுக்க முனைப்புடன் செயற்படவேண்டும்.

இவ்வாறு பாதிப்படைந்த சிறுவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது சகோதர நீதிவான்களுடன் சேர்ந்து நான் எடுத்து வருகின்றேன்.

### வீதிப் போக்குவரத்து ஒழுங்கு

அடுத்த விடயம் வீதிப் போக்குவரத்து ஒழுங்குபற்றியது. எமது மாணவ சமுதாயத்துக்கு - இளந் தலைமுறைக்கு - வீதிப் போக்குவரத்து, அதைக் கடைப்பிடிக்க வேண்டியதற்கான சமூகப் பொறுப்பு ஆகியவை தெளிவுபடுத்தப்பட்டு உணர்த்தப்படாததால் நாம் இப்போது மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். ஒரு நாகரிகமற்ற சமூகம் என அடுத்தவர்கள் எங்களை விமர்சிக்க முன்னர் நாம் எமது இளம் தலைமுறைக்கு இது விடயத்தில் பொறுப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார்.

### அதிபர் உரை

வித்தியாலய அதிபர் செல்வி. ஏ.கந்தையா தமது தலைமையுரையில் கூறியதாவது:-

உடம்பில் உறுதியும், மனதில் தெளிவும் கற்றலுக்கு மிகவும் வேண்டப்படுபவை. புத்தகப் படிப்புடன் மட்டும் நிற்காது சிறந்த ஆற்றல்களை - பட்டறிவினை - சிறந்த ஆளுமையை மாணவர்கள் பெற்றுக் கொள்ள இத்தகைய விளையாட்டு விழாக்கள் உதவுகின்றன.

ஒழுங்கு, ஒழுக்கம், தன்னடக்கம், கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை, கடமையுணர்வு, சமூகமயமாக்கம் போன்ற யாவற்றையும் மைதானத்தில் பெற்றுக் கொள்ளும் மாணவன் வளர்ந்து வரும்போது, பள்ளிவாழ்க்கையில் - மைதானத்தில் - தான் பெற்ற பண்புகள் மூலம் தனக்கு, தனது குடும்பத்துக்கு, தான்படித்த பாடசாலைக்கு, சமூகத்துக்கு பெருமை தேடிக் கொடுக்கின்றான்.

இத்தகைய விளையாட்டு விழாக்கள், அவை தொடர்பான பயிற்சிகள் என்பன படிப்புக்கு இடையூறு அல்ல; அவை நல்வாழ்வுக்கு வழிகாட்டிகள் என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். பாடசாலையின் புற நடவடிக்கைகளில் பிள்ளைகளை ஈடுபடவைத்து - அவர்களை ஆர்வமுடன் கலந்துகொள்ளச் செய்து - அவர்களை சுகதேகிகளாக, நற்பண்புள்ளவர்களாக, மகிழ்ச்சி மிக்கவர்களாக வழிப்படுத்துவது பெற்றோர் கடமை. மாறாக ஓடு, ஓடு என்று பிள்ளைகளை வேறு எங்கோ விரட்டுவதன் மூலம் அவர்களுக்குப் பாடசாலைகளில் பெறக்கூடிய நல்லனுபவங்களை இழக்கச் செய்து விடக் கூடாது. கல்வியின் ஓர் அங்கமே விளையாட்டு.

இன்று எமது சமுதாயம் எமக்கேயுரிய நற்பண்புகளை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, மாறி வருகின்றது. மாணவப் பருவத்தில் - இளம் வயதில் - எமது சிறார்களை நாம் நல்வழிப்படுத்தத் தவறுவதன் விளைவு தான் இது. - என்றார்.

திருமதி விக்னராஜா வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார். இடைவேளையின்போது மாணவர்களின் கண்ணுக்கு இனிய உடற் பயிற்சி நிகழ்வும் இடம்பெற்றது.

(உ)

## விண்ணப்ப முடிவு திகதி. நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.5

பச்சிலைப்பள்ளி நிரந்தர தெங்கு செய்கையாளர் சங்கத்தினால் தெங்கு செய்கைபற்றிய விவரக்கொத்து தயாரிப்பதற்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது,

எதிர்வரும் 15 ஆம் திகதிவரை தெங்குச் செய்கையாளர் தமது விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில் 06 - 08 - 1936



இறைவன் அடியில் 03 - 02 - 2001

## அமரர் பொன்னையா சிவபாதம்

அன்பின் இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
சிரிப்பின் பிறப்பிடமாய் பாசத்தின் ஒளிவிளக்காய்
பிரகாசித்து எமைவிட்டுப் பிரிந்தும் பிரியாத அன்புத் தெய்வத்துக்கு
எங்கள் கண்ணீர்ப்பூக்கள் சமர்ப்பணம்!

*"பொன் அருவி",*
*கரவெட்டி வடக்கு,*
*வதிரி.*

சகோதரி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(84834)

# இலங்கை வங்கிக் கிளையிலும் நகை அடகுக் கடன் திட்டம்

## எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக்குக் கிளைகளில் நகை அடகு வைக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

"ரன் சுரக்கும் நய" என்னும் பெயரில இந்த நகை அடகு வைக்கும் கடன் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் பிரதேசமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பது தொடர்பான நிகழ்வு ஒன்று எதிர்வரும் 7ஆம் திகதி புதன் கிழமை இலங்கை வங்கியின் யாழ்.உயர்தரக்கிளையில் நடைபெறவுள்ளதாகவும் -

இந்தத் திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை அறிய விரும்புபவர்கள் தம்முடன் நேரில் தொடர்பு கொள்ளலாம் எனவும் - அவர் அறிவித்துள்ளார்.

(ம-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்5

பச்சிலைப்பள்ளியில் உள்ள விவசாய சம்மேளனங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10மணிக்கு பருத்தித்துறையிலுள்ள பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-5)


# மலிவு விலையில்

உயர்தரமான கணனிகள் P 111 800 MZ

உதிரிப்பாகங்கள்.

- MONITOR
- KEY BOARD
- SPEAKERS
- C.D.S.
- MOUSE
- FLOPPY DISKETS
- DUST COVER
- PRINTER
- SCANNER
- U.P.S.
- CARTRIDGES
- MODEM
- RIBBONS

இன்னும் பல உதிரிப் பாகங்கள் மேலும் புதிய CD கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்!



- COMPUTER TYPING
- PRINTING
- E-MAIL
- FAX

முதலிய வசதிகள் யாவற்றையும் ஒரே இடத்தில் குறைந்த செலவில் செய்துகொள்ள நாடுங்கள்!

SRIMURUGAN COMPUTER SYSTEMS

303, K.K.S ROAD - JAFFNA.
T.P: 2670, 3588
FAX: 3214

(C/15546)


# நெஞ்சம் நீங்கா நினைவுகள்

## முதலாம் ஆண்டு

பிறப்பு 12 - 04 - 1922



இறப்பு 15 - 02 - 2000

### திருமதி கைலாசபதி கனேசன்

திதி:-ஏகாதசி

தாயே!

(ஆசிரியப் பா)

ஓராண் டோடி ஒழிந்த தின்று
சீராம் வாழ்வு நடாத்திய தெய்வம்
திருமதி கனேசன் கைலாச பதியே
பெருநிதி என்னைப் பெற்றுநாம் இழந்தோம்
மக்கள் நால்வரை பெற்றும் எங்கள்
மங்கல வாழ்வின் வழிகாட் டியாயும்
சங்கையாய் வாழ்ந்திட வைத்தஎம் தாயே!
கற்பின் சிகரமாய்க் கண்டு களித்தோம்
அற்புதத் தெய்வநின் ஆட்டத் திதிக்கு
ஆசி தந்தெம் நேசம் பெருக்கி
போசனம் அருந்திப் போக
நேசம் ஆக அழைக்கின்றோமே.

*156, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (84883)

## ஏழாம் ஆண்டு

பிறப்பு 22 - 09 - 1917



இறப்பு 13 - 11 - 1994

அமரர்

அளவையூர் சைவப்புலவர்

கணநாதவாரிதி, சித்தவைத்திய கலாநிதி, சமாதானநீதிவான்

### பண்டிதர், வித்துவான் சி.நா.கணேசனார் (B.O.L)

திதி:-வளர்பக்கத் தசமி

தந்தையே!

நீண்ட உலகில் நெருங்கி வாழ்ந்து
வேண்டாம் என்று விண்ணுல கெய்திய
வித்துவான் பண்டிதன் மேலாம் சித்த
வைத்திய செந்தமிழ் வாணநீ நீங்கி
ஆண்டு ஏழு அகன்ற தாயினும்
அன்புப் பத்தினி கைலாச பதிதன்
ஆண்டுத் திதியாம் இற்றைத் தினத்தினத்தில்
மீண் டொரு தேவன் ஆக
ஈண்டு வர யாம் அழைக்கின்றோமே.

மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி!

இலங்கை அரசாங்கத்தினரால் 1979ஆம் ஆண்டு மகாவலி வலய அணைக்கட்டுகளுக்காக சிபாரிசு செய்யப்பட்ட உன்னதம் மிக்க தரத்தின் சின்னம் மகாவலி மெரைன் அத்துடன் இலங்கையில் மிகப் பெரிய கொன்கிறீட்டு நிர்மாணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட சீமெந்து மகாவலி மெரைன்.

இதில் -

- விக்டோரிய அணைக்கட்டு
- இலங்கை வங்கி தலைமையகம்
- மியூயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, ஹல்ஸ் டோப்
- கொழும்பு ஹில்டன் ஹோட்டல்

ஆகிய கட்டட நிர்மாணங்களுக்கு உபயோகிக்கப்பட்ட சீமெந்து "மகாவலி மெரைன்" தற்பொழுது மொத்தமாகக் கிடைக்கும் இடங்கள்:

## E.S.பேரம்பலம் & கம்பனி

50,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. :- 021-2988

## பாக்கியரட்ணம் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

பிரதான வீதி, சங்கானை.

FAX:-070-212713

021-2664

மட்டுப்படுத்தப்பட்ட

மகாவலி மெரைன் சீமெந்து கம்பனியினரால்

(Mahawali Marine Cement Co.LTD.)

அங்கீகரிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு விநியோகஸ்தர்:

## C.SIVASAMY & CO

A/G/3, SANCHI ARACHCHI GARDEN,

COLOMBO - 12.

T.P. :- 449371,324615,470186

FAX:- 470187,466659

(சி15544)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மூவர் தேவாரம், திருவாசகம், திருக்குறள், பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், பகவற்கீதை, நற்சிந்தனை இன்னும் பல பெரியோர்கள் அருளிய தெய்வீக நூல்கள் இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். மாலை 2.00-6.00 மணி வரை. (84903)

45 நாள் நிரம்பிய தனிக்கறுப்பு இன ஜேர்மன் சப்போட் அல்சேசன் இன நாய் (தாயும் குட்டியும்), சிறிய பொமேரியன் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. **88/5C,** கோவில் பத்திரகாளி கோயில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (84840)

ஒரு வயது நிரம்பிய **DOBER-MANN** நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அகுமாரவேலு (அதிரியர்), **132/1,** கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (பூங்கா அண்மையில்) சனி, ஞாயிறு. (84866)

புதிய SANYO (CLT-85KM), கான் போன் செற் (5 Km), ANTENNA ROTATOR என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (84944)

## தலைமுறை இடைவெளி

வானம்பாடி சேவையில் 'தலைமுறை இடைவெளி' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.இலக்கியக் கட்டுரைகள், 2. யாழ்ப்பாணமா? கொழும்பா?, 3. யாழ்ப்பாணம், 4. நாடகம் எழுதுவது எப்படி?. (84898)

## தேவை

ரெலிபோன், பக்ஸ், போட்டோ செற் செய்ய அனுபவமுள்ள ஓர் ஆண் ஊழியர் உடன் தேவை. தொடர்பு: **A.**குகனேஸ்வரன் (குகா), பலாலி றோட், கோண்டாவில் சந்தி.
**T.P.2266.** (84839)

## வீடு வாடகைக்கு உண்டு

சுண்டிக்குளியில் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 67, குருசோ வீதி, சுண்டிக்குளி. (84845)

## கணிதம், ஆங்கிலம்

ஆண்டு 5 முதல் 11 வரை கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் 15 வருட பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு: அ.ஞானசம்பந்தன், 67, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (84850)

## தவறிவிட்டது

02.03.2001 வெள்ளிக்கிழமை முதலாவது மினிபஸ் ஒன்றில் பயணம் செய்த இந்திராணி பாலசுந்தரம் ஆகிய எனது "கிளினிக்" மருந்துக் கொப்பியும் மருந்தும் அடங்கிய சிறிய பொலித்தீன் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 23, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (84914)

இல.71, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைலஸ் சஜீவன் தொமஸ் என்பவருடைய விசேட அ.அ. றக்கா வீதிக்கும் வேம்படி வீதிக்கும் இடையில் 24.02.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (84940)

37, விதானையார் வீதி, ஈச்சமோட்டையைச் சேர்ந்த அருட்பிரகாசம் றெஜி என்பவருடைய விசேட அ.அட்டை (இல.090127147) 25.02.2001 அன்று சுண்டிக்குளிக்கும் சின்னக்கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈச்சமோட்டை தவசீலன் கடையில் தயவு செய்து ஒப்படைக்கவும். (84923)

## படிவம்

ஆசிரியர் கல்வி, கற்கை நெறிக்கான ஆசிரியர்களைத் தெரிவதற்கான படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 2/-. முடிவு திகதி: 15-03-2001. நாயகபாலன், மானிப்பாய். (84902)

---

## N.C.O.M.S தரம் I க்கான பாடத்திட்டம்

வீட்டிலிருந்தே கற்றுக் கொள்வதற்கு - யாழ்.பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் **ஸ்ரீ.தர்ஷனன்** B.MUSIC பாடிய ஒலிநாடா.

*இடம்:* **பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

- ஸ்ரீ.தர்ஷனன்,

(84913) *செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.*

---

## யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்

## இல்ல மெய்வல்லுநர் போட்டி 2001

காலம் : இன்று (2001.03.05) திங்கட்கிழமை பி.ப 2.00 மணி
இடம் : பாடசாலை மைதானம்
தலைவர் : **செல்வி யோ.செ.வஸ்தியாம்பிள்ளை** (அதிபர்)
முதன்மை விருந்தினர்: **திரு.கனகரத்தினம் கேசவன்** J.P.U.M (சட்டத்தரணி - நொத்தாரிஸ் - பதில் நீதிவான்)
சிறப்பு விருந்தினர்: **திரு.த.இராசலிங்கம்** (உதவிக் கல்விப் பணிப்பாளர் - யாழ். வலயம்)
கௌரவ விருந்தினர்: **திரு.பேரம்பலம் நாகரட்ணம்** (தொழிலதிபர், ESP & CO, யாழ்ப்பாணம்)
பரிசில் வழங்கல்: **திருமதி சிவமலர் கேசவன்**

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

விளம்பர அனுசரணையாளர்கள்

யாழ். நகரில் மணம் கமழ் டிசைன்களில் உள்நாட்டு, வெளிநாட்டு புடைவைகளுக்கு: *சிங்கம் சில்க் ஹவுஸ், 18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*

**யாழ்.நகரில்** தரமான மிக்ஸர் வகைகளுக்கு **ஸ்ரீ சரவணா** விற்பனை நிலையம் *இல.10, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

**விழா சிறப்புற உதவி புரிகின்ற அன்பு நெஞ்சங்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றிகள்.**

**தி.ரவீந்திரநாதன்**
(84935) விளையாட்டுத்துறைச் செயலர்.

---

## அல்லாரை மாணவருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்5

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5இல் கற்கும் மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பங்களை நிரப்புவதற்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கொற்றாவத்தை 'ஸ்ரடி சேக்கிள்' கல்வி நிலையத்தில் இயங்கும் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்5

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை செயலாளர் சி.சக்திகிரீவன் எழுதிய 'சிவசக்தி அநுபூதி'நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் கோயிலில் நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகளும் சிவஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக் குருக்களும் வழங்குவார்கள்.

தொடக்கவுரையை பேராசிரியர் செ.பாலச்சந்திரன் நிகழ்த்துவார். அருட்கவி சீ.விநாசித்தம்பி, த.பரம்சோதி ஆகியோரும் -

வெளியீட்டுரையை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் மதிப்பீட்டுரையை சைவப்புலவர் சு.செல்லத்துரையும்-

சிறப்புரைகளை புலவர் வை.க.சிற்றம்பலம், பேராசிரியர் கா.குகபாலன், பேராசிரியர் நா. ஞானகுமாரன், திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தா, ஐயாச்சிதானந்தம், காரை.எம்.பி.அருளானந்தம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

நன்றியுரையை யாழ். பல்கலைக்கழக மார்ஷல் ஐ.கோ.சந்திரசேகரம் வழங்குவார். (ஐ-5)

## சமித்தியில் வீடியோப் படக்காட்சி

அரியாலை,மார்ச்5

'சீரடிசாயியின் அவதாரமும் சமாதியும்' 'சாயி பாபாவின் அவதாரம்' ஆகிய வீடியோப் படக்காட்சிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் காண்பிக்கப்படஉள்ளது.

(ஐ-17)

## சந்தேக நபருக்கு பிணை

யாழ்ப்பாணம்,மார்ச்5

மல்லாகம் பகுதியில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி கொலை செய்யப்பட்ட சோமசுந்தரம் சிவலிங்கம் என்பவரது கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா பிணையில் செல்ல அனுமதித்தார்.

மல்லாகம் நீதிமன்றில் இளவாலை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் கடந்த வெள்ளியன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட அப்பாப்பிள்ளை சின்னத்துரை (வயது 67) என்பவரையே 50ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (க-6-5)

## இலங்கையர் தடுத்து வைப்பு

அங்காரா,மார்ச்5

துருக்கிக்குள் சட்ட விரோதமாகப் பிரவேசிக்க முயன்ற 53 பேரை அந்நாட்டின் எல்லைக் காவல் படையினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

இலங்கையர்கள் உட்பட சியராலியோன், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், அல்ஜீரியா ஆகிய நாட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

துருக்கி எல்லையூடாக கிரேக்கம், பல்கேரியா ஆகிய நாடுகளுக்குள் பிரவேசிக்க இவர்கள் திட்டமிட்டு இருந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இவர்கள் மீது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாநகர சபையின் முதல்வராகப் பதவி ஏற்றிருக்கும் உயர்திரு. **நடராஜா ரவிராஜ்** **(Attorney at - Law & Notary public commissioner for oaths)** மாண்புமிகு முதல்வர் அவர்களையும்



யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வராகப் பதவி ஏற்றிருக்கும் உயர்திரு. **செல்லன் கந்தையன்** கௌரவ பிரதிமுதல்வர் அவர்களையும்



யாழ். மாநகர சபையின் ஆணையாளராகப் பதவி ஏற்றிருக்கும் உயர்திரு. **இராசா தணிகாசலம் (S.L.A.S.)** மாண்புமிகு ஆணையாளர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களின் அளப்பரிய சேவைகள் யாழ். மாநகர மக்களுக்கு என்றென்றும் கிடைத்திட இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**யாழ்.மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C/15550)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 06 - 05 - 1931



இறப்பு 02 - 02 - 2001

## அந்தோனி செபஸ்ரியன்

உலகத்தை உணர்த்தி விட்டீர்!
உண்மைதனைப் புகட்டி விட்டீர்!
கல்விதனைக் கற்க வைத்தீர் - தேசத்தில்
நாம் தலை நிமிர்ந்து வாழ வைத்தீர்!
நீர் கண்மறைந்து செல்வதற்கா - எமைக்
கண் காணாமல் அனுப்பி வைத்தீர்?
மாதங்கள் பல சென்றாலும் - எம் அகவை
பல கழிந்தாலும் ஆறாது எம் துயரம்!
தீராது நம் கவலை!

*14/1, புதுமை மாதா கோவில் மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.*

**மனைவி, மக்கள், மருமகள்,பேரப்பிள்ளைகள்.** (84929)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 09 - 1920



மறைவு 16 - 02 - 2000

## அமரர் வடிவேலு தங்கராசா

**திதி: 05-03-2001**

தலைவரென புகழ் நாமம் பூண்டு தரணியில் தலைமைக்கு இலக்கணம் வகுத்து ஊராண்டு மக்கள் உள்ளத்தமர்ந்த கம்பர்மலை வடிவேலு தங்கராசா அவர் பெயர் நினைந்து வாழ்வோம்!

*கம்பர்மலை, உடுப்பிட்டி.*

- குடும்பத்தினர் (84939)

# தாய்லாந்துப் பிரதமர் ஏறும் முன் வெடித்துச் சிதறியது விமானம்!

## அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்

பாங்கொக், மார்ச் 5

தாய்லாந்துப் பிரதமர் தாகிங் நேற்று பயணம் செய்வதாக இருந்த விமானம் வெடித்துச் சிதறியதில் விமானப் பணியாளர் ஒருவர் உயிரிழந்தார். பிரதமர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

பாங்கொக் விமான நிலைய ஓடு பாதையில் நின்றிருந்த 'ஜெட்' விமானம், பிரதமர் ஏறுவதற்கு 35 நிமிடங்கள் முன்னதாகத் திடீரென்று தீப்பற்றி வெடித்துச் சிதறியது. பணியாளர் ஒருவரைப் பலியான இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.

விமானம் வெடித்துச் சிதறியதற்குச் சதி வேலை காரணமாக இருக்கலாம் என்றும் பிரதமர் தாகிங்கின் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொலைத் தகவல் தொடர்புத் துறை வர்த்தகரான தாகிங் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற தேர்தலில் தனது 'தாய்ரக்தாய்' கட்சியை அமோக வெற்றி பெறவைத்துப் பிரதமரானார்.

(ஒ-7)

### புத்தர் சிலைத் தகர்ப்பையடுத்து

## ஆப்கானிஸ்தானில் காணப்படும் இந்துச் சின்னங்களுக்கு ஆபத்து?

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகளும், கலாசார சின்னங்களும் ஆளும் தலிபான்களால் தகர்த்து அழிக்கப்பட்டு வருவதையடுத்து அங்குள்ள இந்து மத புனித சின்னங்களும் அழிக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

பக்தியார் மாகாணத்தில் இந்துமத வரலாற்றுப் பாரம்பரிய சின்னங்களும், குகைக் கோயில்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

புத்தர் சிலைகளை அழிக்கும் பணிகள் நிறைவடைந்ததும் தலிபான்களின் கவனம் பக்தியாரில் உள்ள இந்துமத சின்னங்களின் மீது திரும்பினால் அவையும் அழிக்கப்படும் என்று அஞ்சப்படுகிறது.

சிலைகள் மற்றும் சின்னங்களை வழிபடுவது இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்கு விரோதமானது என்று கூறி தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் உள்ள சரித்திரப் புகழ் பெற்ற புத்தர் சிலைகளையும் கலாசார சின்னங்களையும் தகர்த்து வருகின்றனர்.

# புத்தர் சிலைகளைக் காப்பாற்ற பாரதீய ஜனதா அரசு தயாராம்

புதுடில்லி, மார்ச் 5

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்கள், இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு விரோதமானவை என்று கூறி அங்குள்ள புத்தர் சிலைகளைத் தகர்க்கத் தொடங்கியிருப்பதால் அவற்றை இந்தியாவுக்குக் கொண்டு வந்து பேணிப் பாதுகாக்க இந்திய அரசு தயாராக உள்ளது.

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை —

தலிபான்களின் முடிவினால் ஏற்பட்டுள்ள கலக்கம் குறித்து உலகத் தலைவர்களுக்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கடிதம் எழுதியுள்ளார்.

மீண்டும் உருவாக்கப்பட முடியாத மரபுச் செல்வங்களை அழிக்கும் பணி தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருப்பதாக வரும் செய்திகள் உலக நாடுகளை கலக்கத்தில் ஆழ்த்தியிருப்பதாக வாஜ்பாய் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் அயோத்தியில் பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கக் காரணமானவர்கள் என்று வாஜ்பாயின் பாரதீய ஜனதாக் கட்சியினர் மீது குற்றஞ்சாட்டப்படுவதை ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத் தக்கது.

(ஒ-7)

### பிரிட்டனால் தடைசெய்யப்பட்ட

## காஷ்மீர் குழுக்களின் தாக்குதலில் 17 பொலிஸார் உயிரிழந்தனர்!

ஸ்ரீநகர், மார்ச் 5

பிரிட்டிஷ் அரசால் தடைசெய்யப்பட்டுள்ள காஷ்மீர்த் தீவிரவாதக்குழுக்கள் இணைந்து 2 நாள்களுக்குமுன்னர் நடத்திய தாக்குதலில் 17 பொலிஸார் உயிரிழந்தனர். மேலும் 3 பொலிஸார் காணாமல் போயுள்ளனர்.

கஸ்மான்கோட் மாவட்டத்தில் தீவிரவாதிகள் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து கலாபான் கிராமத்தில் தேடுதல் நடத்திவிட்டுத் திரும்பிய பொலிஸ் குழுவே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

ஏவுகணைகள், கிரனேட்டுகள் ஆகியவற்றை உபயோகித்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 15 பொலிஸாரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும், காணாமல் போன 5 பேரையும் தேடி வருவதாகவும் மாநில பொலிஸ்துறையினர் தெரிவித்தனர்.

பிரிட்டனால் சமீபத்திக் தடைசெய்யப்பட்ட லக்ஸர் இ தொய்பா, ஹிஸ்புல் முஜாஹிதீன், ஜெய்சி மொகமட் இஸ்பி இஸ்லாமி ஆகிய காஷ்மீர்த் தீவிரவாத அமைப்புகளே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

(ஒ-7)

# கண்ணீர் அஞ்சலி

## A. K. துரைசிங்கம்

[A K. T. லண்டன்]

23-01-2001 அன்று சென்னையில் அகால மரணமான வேலணை மேற்கு சிற்பனையைச் சேர்ந்தவரும், முன்னாள் (காலி) பிரபல வர்த்தகரும், சமய, சமூக சேவையாளரும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவருமான A. K துரைசிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, மக்கள், உடன்பிறப்புக்கள், உறவினர் யாபேரினதும் துயரத்தில் நாமும் இணைந்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிற்பனை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிற்பனை முருகன் ஆலய
பரிபாலன சபையினர்,
வேலணை மேற்கு,
வேலணை.

(84934)

# மேற்குக்கரை மோதலில் சிறுவன் பலி!

காஸா, மார்ச் 5

மேற்குக் கரைப் பிரதேசங்களில் இஸ்ரேலியப் படையினருக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 3 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் 13 வயது பலஸ்தீனச் சிறுவனும் அடங்குவதாகக் கூறப்படுகிறது.

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 02 — 09 — 1967

இறைவன் அடியில் 05 — 03 — 1998

## செல்வி செபஸ்தியாம்பிள்ளை ஹயசிந் (சுமதி)

'நீரே என் தந்தை; என் இறைவன்
என் மீட்பின் பாறை'

[சங். 89:26]

அன்பின் திருவுருவாய் அவனியில் வந்து
பாசம் தனைப் பொழிந்து – நெஞ்சுருக
எமை விட்டுச் சென்றதெங்கே?
ஆண்டுகள் பல கடந்தாலும் உன்
திருமுகம் எம் மனதில் நிழலாடும்!

பாசத்துக்கும் பண்புக்கும் உறைவிடமான அன்பு மகள், அன்புச் சகோதரி, செல்வி செ. ஹயசிந் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக உடுவில் புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று [5-3-2001] திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு (பு.நே) இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் பிரிவால் துயருறும்
அன்புப் பெற்றோர்,
சகோதர சகோதரிகள்.

'பெத்தேல்',
இல. 100, உடுவில்,
சுன்னாகம்.

(84943)

### 300 கி. மீ. வேகத்தில் பயணித்த

# லண்டன் ரயிலின் அடிப் பகுதியில் மறைந்திருந்த 9 குடியேறிகள்!

## உயிர் தப்பியது குறித்து ஆச்சரியம்

லண்டன், மார்ச், 5

பிரான்ஸிலிருந்து பிரிட்டனுக்குச் சென்ற அதி விரைவு ரயிலின் அடிப்பகுதியில் மறைந்திருந்த சட்டவிரோதக் குடியேறிகளான 9 பேர் பிடிபட்டனர்.

கடந்தவாரம் பாரிஸிலிருந்து லண்டனுக்குசென்ற யூரோஸ்டார்' என்ற அதி விரைவு ரயிலில் ஆண்களும், பெண்களுமாக 9 பேர் வெளிப்புற அடிப்பகுதியில் மறைந்து பயணம் செய்தனர்.

ரயில் லண்டன் ரயில் நிலையத்தில் பயணிகளை இறக்கிவிட்டு தரிப்பிடத்துக்கு புறப்பட இருந்த போதே பிரிட்டிஷ் போக்குவரத்துப் பொலீஸாரால்இந்த 9 பேரும் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் இவர்கள் பிரிட்டிஷ் குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மணிக்கு 300 கிலோ மீட்டர் வேகத்தில் விரைந்து ரயிலின் அடிப்பாகத்தில் பயணித்த இந்த 9 பேரும் உயிர்தப்பியது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும்—

அது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவிக்கவில்லை

ஆனால் அவர்கள் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறியுள்ளன.

(ஒ-7)

## பி. பி. ஸி. வளாகம் அருகே குண்டு வெடிப்பு

லண்டன், மார்ச் 5

பிரிட்டனின் மேற்கு லண்டனில் உள்ள பி. பி. ஸி செய்தி நிலையத்தின் வளாகத்துக்கு வெளியே நேற்று முன்தினம் நள்ளிரவுசக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இதனால் செய்தி ஒலிபரப்பு அறையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## முதுபெரும் பத்திரிகையாளர் காலமானார்

சென்னை, மார்ச் 5

இந்தியாவின் முதுபெரும் பத்திரிகையாளரான ஏ.என். சிவராமன் சென்னையில் கடந்த வியாழக்கிழமை தனது 96ஆவது வயதில் காலமானார்.

புகழ்பெற்ற 'தினமணி' பத்திரிகையின் ஆசிரியராக 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய சிவராமன் 'கணக்கன்' என்ற புனை பெயரில் எழுதிய ஆக்கங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

(ஒ)

# துயர் பகிர்வு

எமது குருமட மாணவன்

பெ. சதீஸ்குமார் அவர்களின் அன்புத்தந்தையார்

## திரு. அல்பிறட் பெனடிற் (யோகம்)

அவர்கள் சுவிற்ஸர்லாந்தில் காலமான செய்தி அறிந்து துயருறும் அவரது குடும்பத்தாரோடு எமது அனுதாபங்களைப் பகிர்வதுடன் அன்னாரின் ஆன்மா இறைவனின் நித்தியத்தில் இளைப்பாற எமது செபங்களை இறைவன் பாதத்தில் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், மாணவர்கள்.
புனித மடுத்தீனார் குருமடம்.

450, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(84945)

### கல்வியியற் கல்லூரி மாணவர்

# மர நிழலில் பயில்வது குறித்து பீடாதிபதி தெளிவுபடுத்துகிறார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வகுப்பறைகள் பல பூட்டப்பட்டுள்ள போதிலும் அவற்றைக் கல்வியியற் கல்லூரிக்குத் தருமாறு வற்புறுத்த முடியாது.

யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் பங்களிப்புப் பெரியது. அந்த வகையில் கலாசாலை நிர்வாகம் எமக்கு உதவ முன்வந்தால் நாம் மகிழ்ச்சியடைவோம்.

இவ்வாறு நேற்றைய உதயனில் வெளியான ''வெறுமையான வகுப்பறைகள் இருந்தும் மரநிழலின் கீழ் அமர்ந்து கல்வி கற்கும் கல்வியியற் கல்லூரி மாணவர்கள்'' என்ற செய்தி குறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு இடப் பிரச்சினை, வகுப்பறைப் பிரச்சினை உண்டென்பது மறுக்க முடியாத உண்மையே. ஆசிரியர் கலாசாலையில் வகுப்பறைகள் பல தற்போது பாவிக்கப்படாது பூட்டப்பட்டுள்ளன என்பதும் சரியானதே. ஆனால் அவற்றை கல்வியியற் கல்லூரிக்குத் தருமாறு நாம் வற்புறுத்த முடியாது உள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையால் பல்வேறு விதமான உதவிகள் எமக்களிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றத்தில் அவர்களின் பங்களிப்பும் உண்டு என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன் — என்றார். (அ)

### ஷெல் வீச்சில் அவலப்பட்டு ஓடியபோது

# மட்டுவிலில் அவிழ்த்து விட்ட பசு 10 மாதங்களின் பின் கிடைத்தது!

தென்மராட்சி, மார்ச் 5

மட்டுவில் வடக்கில் அகோர ஷெல்வீச்சுக்களின் மத்தியில் அவலப்பட்டு ஓடிய போது அவிழ்த்து விடப்பட்ட சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு 10 மாதங்களின் பின்னர் உரிமையாளருக்குக் கிடைத்துள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது:-

கடந்த மே மாதம் மட்டுவில் வடக்கில் இடம்பெற்ற அகோர ஷெல் வீச்சுக் காரணமாக மாடுகளை அவிழ்த்து விட்டுவிட்டு உரிமையாளர் இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் தங்கியிருந்தார்.

கடந்த வாரம் இந்த மாடு புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தில் கட்டப்பட்டுள்ளதை அறிந்த உரிமையாளர் அங்கு சென்றார். உரிமைகோரும் சான்று சமர்ப்பித்து அந்த மாட்டை அவர் பெற்றுக் கொண்டார்.

மாட்டின் உரிமையாளரின் பிள்ளைகள் இந்த மாட்டுடன் எடுத்த புகைப்படங்களையும் அவர் சமர்ப்பித்திருந்தார்.

இந்த மாடு கமநல சேவைகள் நிலையத்தில் கட்டப்பட்டிருந்த போது 11 பேர் உரிமைகோரி வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-117)

## அவைக்காற்று நிகழ்வு இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

வட இலங்கைச் சங்கீத சபையின் ஏற்பாட்டிலான அவைக்காற்று நிகழ்வு எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்த முன்பு ஏற்பாடாகியிருந்தது. குறிப்பிடத்தக்கது. (உ 3)


## மரண அறிவித்தல்

### பொன்னையா பொன்னம்மா

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாகம்மாள் கோயில் வீதி, உடுவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னையா பொன்னம்மா அவர்கள் நேற்று (4-03-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் — பொன்னையாவின் அன்பு மனைவியும், முருகன் — நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், அருளானந்தம் (றூபா இனிப்புத் தொழிலகம்), சந்தானலஷ்மி, பத்மநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தில்வேல், காலஞ்சென்றவர்களான சின்னையா, தங்கம்மா, செல்லர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவளமலர், திருச்செல்வம் (திரு கொன்ஸ்றக்ஷன்ஸ் கட்டட ஒப்பந்தகாரர்), மாலா கொலஸ்ரிக்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துணைவாசன், தவறூபன் (யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள்), பவளறஞ்சினி, பிரியசாந்தினி, (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), பிரதீபரா, இளங்கீதன் (பரியோவான் கல்லூரி), ஹமீலா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கர்ஷன், சர்மிளா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-3-2001) திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உடுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
நா. திருச்செல்வம்
(மருமகன்)

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(84955)


## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 5

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலைக்கு அருகில் அதிபர் க. ஜெயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஜி. ரி. சற் அமைப்பின் பொறியியலாளர் யோ. தயாபரன் பிரதம விருந்தினராகவும்—

நல்லூர் பல நோ. கூ. சங்கத் தலைவர் பொ. கனகசபாபதி சிறப்பு விருந்தினராகவும் —

கலந்து கொள்வர்.

இன்றைய பரிசளிப்பு நிகழ்வில் 1999—2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நன்கொடையும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ-7)

★ ★ ★

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி யோ. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன.

பதில் நீதிவானும் சட்டத்தரணியுமான க. கேசவன், திருமதி சிவமலர் கேசவன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும்—

ஈ. எஸ். பி. நிறுவனத்தைச் சேர்ந்த பே. நாகரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-7)

★ ★ ★

காரைநகர், மார்ச் 5

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள—பதிவு செய்யப்பட்ட—விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினம், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன், வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் இ. துரைராஜா, ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி க. இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (உ—73)

## புகையிலை அறுவடை ஆரம்பம்

வடமராட்சி, மார்ச் 5

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட புகையிலையை சில விவசாயிகள் உலர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். புகையிலையை உலர்த்த விரும்பாத விவசாயிகள் உலர்த்துவோருக்கு புகையிலையை விற்று வருகின்றனர்.

பச்சைப் புகையிலை ஒரு மரம் 85 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ஐ-173)

### உறவினர்களுடன் தொடர்புகொள்ள

# வாரந்தோறும் 200 பொதுமக்கள் செஞ்சிலுவையை நாடுகின்றனர்

யாழ்ப்பாணம் மார்ச் 5

குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 200 பேர் பிற இடங்களில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்காக வாராந்தம் எமது அமைப்பின் உதவியை நாடுகின்றனர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி சேர்ஜ் மார்மி தெரிவித்தார்

நேற்று முன்தினம் தமது அலுவலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். அலுவலக வதிவிடப் பிரதிநிதியாக கடந்த மாதம் பதவியேற்ற இவர் தமது அமைப்பின் செயற்பாடுகள் குறித்து விளக்குவதற்காக இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

யுத்தத்தால் பாதிக்கப்படும் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எமது அமைப்பு வழங்கி வருகின்றது

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் தங்கியிருப்பவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும், படையினரால் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்காகவும் வாராவாரம் யாழ். அலுவலகத்துக்கு சுமார் 200 பேர் வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குகின்றோம்.

கைது செய்யப்பட்டுத் — தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் 50 முதல் 70 பேரின் கடிதங்களை வாராந்தம் அவர்களது உறவினர்களுக்கு அனுப்புகிறோம்.

எமது மனிதாபிமானப் பணியாக பிரச்சினைகளை தீர்ப்பதற்காக 'சிற்றிஒவ்றிங்கோ' கப்பலுக்கு வழித்துணை வழங்க முன் வந்துள்ளோம். அந்தக் கப்பலில் பயணம் செய்யும் 400 பயணிகளின் பாதுகாப்புக்கே நாம் உத்தரவாதம் வழங்கியுள்ளோம். அந்தக் கப்பல் எந்த நாளில் எப்பாதை ஊடாகப் பயணம் செய்கின்றது என்ற விவரத்தை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தெரியப் படுத்தி அதற்கான பாதுகாப்பை வழங்கி வருகின்றோம் அந்தக் கப்பலுக்கான பயண ஏற்பாடுகள் எதனையும் எமது அமைப்பு செய்வதில்லை.

அதே நேரம் நோயாளர்களுக்கான கப்பல் சேவையை முற்று முழுதாக நாமே நடத்துகின்றோம்.

குடாநாட்டில் கண்ணிவெடிகளாலும், நீரிழிவு போன்ற நோய்கள் காரணமாகவும் அவயவக்களை இழப்பவர்களுக்கு செயற்கை அவயவங்களை பொருத்துவதற்காக தொழில் நுட்ப உதவிகளை ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு வழங்கி வருகின்றோம்—என்றார். (உ-3)

## துறைமுக தொழிலாளர் காயம்

நெல்லியடி, மார்ச் 5

துறைமுக தொழிலாளி ஒருவர், கடலுக்குள் தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். இந்தச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் இடம்பெற்றது.

இழுவைப் படகில் இருந்த பொதிகளை லொறிக்கு ஏற்றும்போதே துறைமுக தொழிலாளியான—கரவெட்டி மேற்கைச் சேர்ந்த — ஆறுமுகம் புஸ்பராசா [வயது 26] என்பவரே தலையிலும் நெஞ்சிலும் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இதே துறைமுகப் பகுதியில் சஜிந்த கப்பலில் இருந்து சீமெந்துப் பொதிகளைப் பாரம் தூக்கி மூலம் உயர்த்தும்போது அப்பொதி தவறுதலாக துறைமுக தொழிலாளி ஒருவரின் தலையில் வீழ்ந்தது. தும்பளை கல்லடி வீதியைச் சேர்ந்த சடாட்சரம் சஜீந்திரன் [வயது 18] என்பவரே இவ்வாறு காயமடைந்தார். இருவரும் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். [உ-109]

## நூற்றாண்டு விழா

சண்டிலிப்பாய், மார்ச். 5

சங்கானை மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவும், நிறுவுநர் தினமும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வித்தியாசாலை அதிபர் வி. நடராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார். வரவேற்புரையை கிராம அலுவலர் சபா. நாராயணன் நிகழ்த்துவார். வாழ்த்துரைகளை வலி. தென்மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன், வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன், யாழ். மாநகர சபை ஆணையாளர் இரா. தணிகாசலம், சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம், வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சு. சுந்தரசிவம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் நிகழ்த்துவார்கள்.

நிறுவுநர் தின உரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார்.


## கண்ணீர் அஞ்சலி

கரம்பன்கிழக்கு ஜீ. ரி. சற் வீடமைப்புக் குழுத் தலைவியும், சென் திரேசா சனசமூக நிலைய உபதலைவியும் மற்றும் சமூகப் பணியாற்றி வரும்

### திருமதி றெபேக்கா யோசேப்

அவர்களின் அன்புக் கணவர்

### பஸ்ரியாம்பிள்ளை யோசேப்

2-3-2001 வெள்ளிக்கிழமை அகாலமரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையபிரார்த்திக்கிறோம்.

G. T. Z வீடமைப்புக் குழு
சென் திரேசா ச. ச. நி.
ஞானவைரவர் ச. ச. நி.
மாதர் கி. மு. சங்கம்.

கரம்பன் கிழக்கு.
யா/52

(84957)

## வல்வை மைதான வழக்குத் தீர்ப்பு:

# யாழ். மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனுத்தாக்கல்

வல்வெட்டித்துறை நகரசபையினால் பொதுவிளையாட்டு மைதானம் அமைப்பதற்காக பறிமுதல் செய்யப்பட்ட தோட்டக்காணிகள் தொடர்பான வழக்கில் பருத்தித்துறை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக யாழ்மேல் நீதிமன்றில் மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கத்தினால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் முறைபாட்டில் தவறுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா திருத்திய முறைப்பாட்டினை சமர்ப்பிக்குமாறு பணித்தார்.

இதனையடுத்து மறுநாள் வெள்ளிக்கிழமை திருத்திய முறைப்பாடு இணைக்கப்பட்டது. இவ்வழக்கினை இம் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி பிரதிவாதிக்கும் அறிவிக்குமாறு கட்டளையிட்டார்.(க-5-6)

# காணாமற் போனோர் விசாரணை; 8 பேரின் உறவினர்கள் யார்?

## புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு

காணமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர், 8 பேர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக-

அவர்களின் உறவினர்களை அல்லது உரித்துடையவர்களை உடனடியாக யாழ்.பொலீஸ் நிலையத்திற்கு வந்து தமது விசாரணைகள் தொடர்பாக தேவையான தகவல்களைத் தந்துதவுமாறு அறிவித்துள்ளனர்.

காணாமற் போனவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

❉ பெனடிற் அல்போன்ஸ் (மத்தியூஸ் வீதி, குருநகர்)

❉ ஜீவநாயகன் -மதியழகன் (செல்வபுரம், சுழிபுரம்)

❉ அகிலேஸ்வரன் அமல்ராஜ் (அக்கராயன் குளம், கிளிநொச்சி)

❉ ஜி.கிருபாகரன் (நாவற்குழி தெற்கு)

❉ சரவணமுத்து சிறீதரன் (மிருசுவில்)

❉ ஐயன்பிள்ளை நிருசன் (கைதடி வீதி, நுணாவில்)

❉ வல்லிபுரம் பாஸ்கரன் (மறவன் புலோ கிழக்கு, சாவகச்சேரி)

❉ அல்போன்ஸ் அன்ரன் (இல.1, மத்திய கிழக்கு வீதி, குருநகர்)

மேற்படி 8 பேரது உறவினர்களே தேவையான ஆவணங்களுடன் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை-

சிவசம்பு விஜயகாந்தன் (முதலாம் ஒழுங்கை கொழும்புத்துறை) என்பவர் காணாமற போனது தொடர்பாக விசாரிக்க கொழும்புத் துறையைச சேர்ந்த இராசரத்தினம் முருகானந்தன என்பவரையும் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அழைப்பு விடுத்துள்ளனர்.

## வைத்திய சேவை ஸ்தம்பிக்கும் ஆபத்து

யாழ்.போதனா வைத்தியசாலையின காது, மூக்கு, தொண்டைக்கான (ஈ.என்ரி) சிகிச்சைப்பிரிவு ஸ்தம்பிதம் அடையும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப்பிரிவுக்கு நிரந்தரமான ஒரு வைத்தியநிபுணர் இல்லாத போதிலும் ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிந்த காது, மூக்கு, தொண்டை வைத்திய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். சிவசுப்பிரமணியம் சேவையாற்றி சிகிச்சையைத் தொடர்ந்து வந்தார். ஆனால் டாக்டர் சிவசுப்பிரமணியத்துக்கு இந்த வருடத்துக்கான ஒப்பந்த அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் அவருக்குரிய வேதனம் ரு மாதங்களாக வழங்கப்படவில்லை. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் அவர் கடமையிலிருந்து ஓய்வு பெறுவது தவிர்க்கமுடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் அந்தச் சிகிச்சைப்பிரிவு முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து காத்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சத்திரசிகிச்சைக் களத்தில் இதுவரை காலமும் கடமை புரிந்து வந்த ஒரே ஒரு மயக்க மருந்து கொடுக்கும் நிபுணரான டாக்டர் திருமதி தெய்வேந்திரனின் பதவிக்கும் இக்கதியே ஏற்பட்டுள்ளது. இவரும் ஒப்பந்த அடிப்படையிலேயே கடமை புரிந்துவந்தார்.

இதே போன்ற நிலைமை தற்போதைய பதில் சட்ட வைத்திய அதிகாரி மற்றும் ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர் சிலருக்கும் ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பிரிவுகளிலும் பணிகள் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

(க)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தோரில இம் மாதம் 2ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| (181091ஏ) | (181091பி) | (182476ஏ) |
| (182476பி) | (182476சி) | (182476டி) |
| (183667ஏ) | (183667பி) | (183667சி) |

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (175461ஏ) | (181765ஏ) | (181765பி) |
| (181784ஏ) | (181817ஏ) | (181817பி) |
| (181818ஏ) | (181818பி) | (181818சி) |
| (181840ஏ) | (181859ஏ) | (181862ஏ) |
| (181862பி) | (181868ஏ) | (181868பி) |
| (181899ஏ) | (181899பி) | (181981ஏ) |
| (181981பி) | (181981சி) | (182005ஏ) |
| (182005பி) | (182136ஏ) | (184355ஏ) |
| (184355பி) | (184356ஏ) | (184356பி) |
| (184364ஏ) | (184369ஏ) | (184369பி) |
| (184369சி) | (184369டி) | (184379ஏ) |
| (184397ஏ) | (184397பி) | (184397சி) |
| (184397டி) | (184397ஈ) | (184397எவ்) |
| (184436ஏ) | (184436பி) | (184510ஏ) |
| (184524ஏ) | (184524பி) | (184527ஏ) |
| (184551ஏ) | (184552ஏ) | (184557ஏ) |
| (184557பி) | (184593ஏ) | (184656ஏ) |
| (184712ஏ) | (184738ஏ) | (184738சி) |

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (184738பி) | (165314ஏ) | (165314பி) |
| (177610ஏ) | (177934ஏ) | (177934பி) |
| (180603ஏ) | (180603பி) | (180603சி) |
| (180611ஏ) | (181093ஏ) | (181178ஏ) |
| (181178பி) | (181179ஏ) | (181179பி) |
| (181294ஏ) | (181294பி) | (181294சி) |
| (181349ஏ) | (182280ஏ) | (182433ஏ) |
| (182433பி) | (182433சி) | (182433டி) |
| (182433ஈ) | (182510ஏ) | (182511ஏ) |
| (182519ஏ) | (182541ஏ) | (182569ஏ) |
| (183552ஏ) | (183552பி) | (183552சி) |
| (183596ஏ) | (183641ஏ) | (183641பி) |
| (183641சி) | (183670ஏ) | (183670பி) |
| (183670சி) | (183708ஏ) | (183708பி) |
| (183818ஏ) | (183818பி) | (183832ஏ) |
| (183909ஏ) | (183918ஏ) | (184007ஏ) |
| (185342ஏ) | (185371ஏ) | (185374ஏ) |
| (185415ஏ) | | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (184634ஏ) | (184634பி) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (175444ஏ) | (180195ஏ) | (181900ஏ) |
| (181900பி) | (184341ஏ) | (184341பி) |
| (184347ஏ) | (184382ஏ) | (184390ஏ) |
| (184390பி) | (184400ஏ) | (184400பி) |
| (184482ஏ) | (184570ஏ) | (184570பி) |
| (184571ஏ) | (184572ஏ) | (184619ஏ) |
| (184619பி) | (184619சி) | (184619டி) |
| (184619ஈ) | (184620ஏ) | (184620பி) |
| (184620சி) | (184624ஏ) | (184624பி) |
| (184786ஏ) | | |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (142651ஏ) | (160207ஏ) | (160207பி) |
| (174690ஏ) | (174690பி) | (181061ஏ) |
| (182499ஏ) | (183544ஏ) | (183581ஏ) |
| (183581பி) | (183581சி) | (183581டி) |
| (183581ஈ) | (183581எவ்) | (183587ஏ) |
| (183587பி) | (183616ஏ) | (183616பி) |
| (183730ஏ) | (183762ஏ) | (183762பி) |
| (183846ஏ) | (183895ஏ) | (183895பி) |
| (183906ஏ) | (183906பி) | (183917ஏ) |
| (183917பி) | (183917சி) | (183917டி) |
| (183917ஈ) | (185351ஏ) | (185397ஏ) |
| (185397பி) | (185416ஏ) | |

(க-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 06 - 03 - 1907 சிவபதம் 03 - 02 - 2001

## திருமதி தம்பையா அன்னப்பிள்ளை

(இணுவில்)

தொண்ணூறொடு நான்கு ஆண்டு நிறைவான
வாழ்வு வாழ்ந்து
கண்ணூறு படாமல் பெற்ற பேரர்கள் பூட்டர்கள்
தம்பால் மகிழ்ந்து
எண்ணிலா வழிபாடாற்றி ஆசார பக்தி
ஞானந்தன்னால்
விண்ணுலகடைந்த எங்கள் அன்பு
அன்னையை வணங்குகின்றோம்

03-02-2001 சனிக்கிழமை ஏகாதசித் திதியில் சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், கண்ணீரஞ்சலிகள் செலுத்தியும், ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (05-03-2001) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சத்தியகிரி",
இணுவில் தெற்கு,
இணுவில்.

திருமதி சிவகுரு ஞானபூங்கோதை
திரு.திருமதி கணேசபிள்ளை,
திரு.திருமதி சொக்கலிங்கம்,
திரு.திருமதி பராபரம்,
திரு.திருமதி சத்தியமூர்த்தி.

(C/15554)

# ஆத்ம சாந்தி அழைப்பு

அன்புடையீர்!

12-02-2001 நிலவுலக வாழ்வை விடுத்து இறைவனடி சேர்ந்த எம் குடும்பத்தலைவி:

## திருமதி செல்லையா கனகம்மா

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை எம் இல்லத்தில் நடைபெறவுள்ளன.


இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

ஸ்ரீ காளிகா சிற்பாலயம்,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

இங்ஙனம்
குடும்பத்தினர் சார்பில்
ஸ்தபதி செ.பாலச்சந்திரன்

(C/15556)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு 02 - 06 - 1952 உதிர்வு 16 - 02 - 1997

அமரர்

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(முன்னாள் கிராம அலுவலர், K/87 - பளை நகரம்)

திதி: 05.03.2001

பளை மண்ணை நீ மறந்து ஆண்டு நான்கானதுவே
பிழை ஏதும் கண்டதில்லை நின் அரிய பணியினிலே
மழை போல எம் விழியில் நீர் இன்னும் ஓயவில்லை
கிளை போல உம் நினைவு எம்முடனே தொடருமையா!

பிரிவினால் துயருறும்:
பெரிய பளை கிராமிய அபிவிருத்திச் சங்கம், பளை.
ஸ்ரீபதி விளையாட்டுக் கழகம், பளை.
ஸ்ரீபதி தேசிய இளைஞர் கழகம், பளை.
ஸ்ரீபதி சனசமூக நிலையம், பெரியபளை.
ஸ்ரீசக்தி நாடக கலாமன்றம், பளை.
ஸ்ரீசக்தி கல்வி நிலையம், பளை.
பெரியபளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், பளை.
பளை இரட்டைக்கேணி அம்பாள் பரிபாலன சபை.
பளை வைத்தியசாலை
நலன்புரிச் சங்கம், பளை.
பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம்.
பெரியபளை மக்களும், பளை நகர்ப் பகுதி மக்களும்.

(C/15551)

# நன்றி நவிலல்



## அமரர் ஆ.க.துரைசிங்கம் (AKT)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டன் மாநகரில் வசித்தவரும், சென்னையில் கடந்த 23-01-2001 ஆம் திகதி அகால மரணம் எய்தியவருமாகிய அமரர் A.K.துரைசிங்கம் (AKT) அவர்களின் பூதவுடல் லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உற்றார், உறவினரின் கண்ணீர் அஞ்சலியின் மத்தியில் நேற்றைய தினம் (04-03-2001) இந்து சமய கிரியைகளுடன் தகனம் செய்யப்பட்டது.

இத்துயரச் சம்பவத்தைக் கேள்வியுற்று நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய அன்பு உள்ளங்களுக்கு அமரரின் குடும்பத்தினர் சார்பிலும் எங்கள் சார்பிலும் ஆழ்ந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

Mrs.N.THURAISINGAM,
153 - CARLYON ROAD,
HAYES - MIDDX,
UB4, ONU,
LONDON.
TEL. 0044208 5732946

T.சிவரத்தினம்
(சரவணா ரேடர்ஸ், யாழ்ப்பாணம்),
மு.திருநாவுக்கரசு
(ஓய்வு பெற்ற நீதிபதி)

(84956)

## காக்கைதீவுப் பாதை திறப்பு

ஓட்டுமடம் சந்தியில் இருந்து பொம்மைவெளி, காக்கைதீவு ஊடாகச் செல்லும் பிரதான பாதை நேற்று முதல பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது. (உ-3)

## பி.பி.ஸி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரிஷ் விடுதலைப் போராளிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தாம் சந்தேகிப்பதாகவும் - அந்தப் பொலீஸ் அதிகாரி சொனனார்.

பிரிட்டிஷ் அரசு அண்மையில் பயங்கரவாத இயக்கங்கள் எனத் தெரிவித்து அந்த நாட்டில் தடை செய யவென சிபாரிசு செய்த 21 அமைப் புக்களில் ஐரிஷ் விடுதலை இயக்கமும் ஒன்றாகும். (உ-7)

## ஏப்ரல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகளின்படி ஏப்ரல் நடுப்பகுதியில் இருந்து சம்பள உயர்வு ஒனறையும் வழங்கவிருக்கிறோம். அதன் பின்னர் மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்படும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் கீழ் வழிநடத்தப்படும் ஆட்சியை சீர்குலைக்க மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. ஆகியன அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்கின்றன. இதற்காகத் திட்டம் தீட்டி அவை செயற்படுகின்றன. இது குறித்து மக்கள் விழிப்புணர்வு கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சு நடத்தி விரைவில் சமாதானத்தை நிலைநாட்டவும் நம் நாட்டு இளைஞர்களைப் பலிகொள்ளும் யுத்தத்தை நிறுத்தவும் அரசாங்கம் தயாராகவிருக்கிறது. இந்த விடயத்தில் சகல முயறசிகளையும் அரசாங்கம் மேற்கொணடு வருகிறது - என்றார் அவர். (உ-3-7-9)

## கூட்டணி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்.மாநகர முதல்வருடன் நகரைச் சுற்றிப்பார்வையிட்ட இந்தியத் தூதுவர் நல்லூரிலுள்ள சுப்பிரமணிய பாரதியார் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

இவர் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆயர் வண.ஜெபநேசன் ஆகியோர் உட்பட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இருநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் நேற்று மாலை கொழும்பு திரும்பினார். (உ-173-86)

## தொடர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் - அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பங்குபற்றினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிவமகாராசா ஆகியோரும் பங்குபற்றினர்.

இங்கு எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

✪ வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவில்லை. உடனடியாக அவர்களுக்கு நஷ்டஈட்டை வழங்கவேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களைக் கோரவேண்டும்.

✪ வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்த வேண்டும். அங்கு அவர்கள் மீளக்குடியமர வசதியாக, அவர்கள் அங்கு தமது வீடுகளைக் கட்டுவதற்கு உதவுமாறு கோர வேண்டும்.

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

(உ-3-86)

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்துவார் என சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

அதைத் தொடர்ந்து பேச்சுக்கான வாய்ப்புக் குறித்து திட்டவட்டமான அறிவிப்பு ஒன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் -

இந்தப் பேச்சுக்களில் தனது நேரடிப் பங்களிப்பும் இருக்க வேண்டும் என வலியுறுத்தி இது விடயத்தில் வலிந்து இந்தியா தலையிட முயற்சிப்பதாகவும் -

தற்போதைய சமாதான முயற்சிகளை இந்தியத் தலையீடு அடியோடு குழப்பிவிடும் எனவும் -

அரசியல் வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டன. (உ-3-7-9)

## தடைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்யப்பட்ட அமைப்புகள் தொடர்பான மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் இது தொடர்பாக முறையீடு செய்யலாம்.

அதுவும் பயன்தராவிட்டால் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய முடியும்.

அந்த முயற்சியும் பலனளிக்காவிட்டால் பிரிட்டனின் பிரபுக்கள் சபையிடம் மேன்முறையீடு செய்யலாம்.

அதுவும் கூட வெற்றியளிக்காவிட்டால், பிரிட்டனின் 1998 ஆம் ஆணடில் மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், "பிரிட்டன் உள்துறை அமைச்சரின் நடவடிக்கை தடைப்படுத்தப்பட்ட உரிமைகளை மீறுவதாக உள்ளது" எனத தெரிவித்துப் பிரிட்டனுக்கு எதிராக ஸ்டார்ஸ்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்.

இத்தகைய தொடர் நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகள் ஆயத்தமாவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## தடைகளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் பொருளாதாரத் தடை மேலும் மேலும் இறுக்கப்பட்டு, எரிபொருள், வாகனப் போக்குவரத்து வசதிகள் முற்றாக இல்லாத நிலையில் நாடகங்களை எவ்வாறு நடத்துவது என்ற ஓர் இக்கட்டான நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டபோது, அதை நிவர்த்தி செய்வதற்காக நீங்களாகவே முன்வந்து, மிதிவண்டிகளில் சென்று, நாடகங்களை மிகமிக வேகமாகவும் சிறப்பாகவும் நடத்தி வருவதன் மூலம் எந்த நெருக்கடிக்குள்ளும் நிமிர்ந்து நிற்போம் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றீர்கள். தெருவெளி நாடகக் கலைஞர்களின் விடுதலைப் பற்றும் அர்ப்பணிப்புகளும் வியக்கத்தக்கன. அது மட்டுமன்றி, இன்றைய எமது நாடகங்கள் முன்னரை விட மிகவும் எளிமையானதாகவும் கருத்தாழம்மிக்கவையாகவும் யதார்த்தமானவையாகவும், புதிய கலை நுணுக்கங்களையும் உத்திகளையும் அறிமுகப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. உலக நாடகப் பரப்பில் எமது நாடகத் தேடல் வளர்ச்சிகண்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

எமது மண்ணின் மக்களை நம்பித்தான் எமது தலைவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து இன்று வெற்றியின் பாதையில் அதனை வழிநடத்திக்கொண்டிருக்கின்றார். ஆகவே, எமது பலம் தான் எமது மக்களுக்கு வாழ்வளிக்கும். அந்த வாழ்வுக்காக போராடும் எமது தலைவரின் பாதையில் தொடர்ந்தும் புதிய வேகத்துடன் செயற்படுவீர்கள் என நான் நம்புகின்றேன்- என்றார். (உ-3)

**தவணைப் பரீட்சை 2001**

இவ்வாண்டின் முதலாம் தவணைப் பரீட்சை எதிர்வரும் 15.03.2001 அன்று ஆரம்பமாகும்.
தரம்: 04 முதல் O/L வரை
வினாப்பத்திரம் தேவைப்படுவோர் 10.03.2001க்கு முன் பதிவு செய்யவும்.

ACADEMY EXAMINATION UNIT
SCIENCE ACADEMY
NALLUR (84958)

**A/L 2002**
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.,(F.M.Spl)
பங்குடைமை முடிவுக் கணக்கு
ஆரம்பம்: 06.03.2001
TUE. - 4.15 - 5.15 p.m
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
(84948)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் லயன்ஸ் கழக உறுப்பினர்
**லயன் டாக்டர் க.பிரதீபன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**வி.ரி.கந்தசாமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/15557) -உரும்பிராய் லயன்ஸ் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### V.T.கந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட V.T.கந்தசாமி 04.03.2001 அன்று காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் டாக்டர் பிரதீபனின் (கொழும்பு தேசிய வைத்தியசாலை) அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற தேவராஜா மற்றும் பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அரசடி,
உரும்பிராய். (C/15558) **சரோஜினிதேவி** (மனைவி)

### திருமதி சரஸ்வதி வயிரமுத்து

நிற்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வயிரமுத்து அவர்கள் நேற்று (04.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் முதலி வயிரமுத்துவின் அன்பு மனைவியும், புவனேந்திரராசா, பாஸ்கரன் (ஹொலண்ட்), பிரேமதாஸ் (ஆசிரியர், மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம், பட்டப்படிப்புகள் கல்லூரி வணிகமானி இறுதியாண்டு மாணவன்), பார்த்தீபன், அரியதாஸ் (கொழும்பு), பகீரதன் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமர்நிதா, தணிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் கேன்சிகாவின் பாசமிகு அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2001)திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் விளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
(C/15560) **மு.வயிரமுத்து** (கணவன்)

### முதலி பரமு

நிற்சாமம், சங்கானையை வசிப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட முதலி பரமு அவர்கள் நேற்று (04.03 2001 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகேந்திரராசா, புஸ்பலதா, சதீஸ்குமார் (லண்டன்) , நேசமலர், திலகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வீரசிங்கம் (கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும், மதுஷாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.03.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
(C/15559) **ப.நாகேந்திரராசா (அப்பு)** (மகன்)

**வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புடன்**
**1000 மாணவர்களுக்கு**
**மாபெரும் புலமைப்பரிசில்**

வருடம் இருதடவைகள் புலமைப்பரிசில் ஊடாக கணனிப் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றனை எமது நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பரவல இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

**விசேட சலுகைகள்**

- தெரிவு செய்யப்படும் இருபது (20) மாணவர்களுக்கு Russia Lumamaba பல்கலைக் கழகத்தில Computer Engineering கற்கை நெறிக்கான அனுமதிகள் பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஏனைய மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி முடிவில் Computer instructor,Computer Lecturerகளுக்கான 6 மாத விசேட (இலவச) பயிற்சி வழங்கப்படும்.
- இந்த விசேட பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு கணனிகள் வழங்கப்படும். அதனைப் பயன்படுத்தி அவர்கள் கணனிசார் நவீன தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.
- பல்கலைக்கழக பாடத்திட்டத்துக்கமைவாக கற்கை நெறிகள் வழங்கப்படும், சகல மாணவர்களுக்கும் இலவச Computer Hardware பயிற்சி வழங்கப்படும்.

**அனுமதி பெறும்முறை**

- எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் நுண்ணறிவுப் போட்டிப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.
- இப்போட்டிப் பரீட்சைக்கு 12 வயது முதல் 45 வயது வரையான அனைவரும் விண்ணப்பித்து கற்கை நெறிகளை மேற்கொள்ளலாம். A/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். இவர்களுக்காக விசேட பிரிவு August இல் ஆரம்பமாகும்.
- விண்ணப்படிவங்கள் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
- மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து நூறு (ரூபா100/=) பரீட்சைக் கட்டணத்துடன் எமது நிறுவனத்தில் சமர்ப்பிக்கவும், அல்லது Director, Univac, 1201, K.K.S.Road, Jaffna. எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் (கற்கை நெறி சம்பந்தமான ஏனைய விபரங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும்.)

**விண்ணப்ப முடிவுத்திகதி: 12.03.2001**

**UNIVAC**
College of Computer Information Technology
(British ACP Recognized Computer Training Centre)

| Black Road, Chankanai | K.K.S. Road, Narchimar Kovil, Jafna. | Poinpedro Road, Atchuvely. |
|---|---|---|

(84828)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05. 03. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.